தென்மொழி

விடுதலை நாள்!

அறநூல்கள் பலப்பலவும் இருந்தாலும்
அவைகூட்டி முழங்கினாலும்
பிறவியினால் இழிசாதி என்றுரைத்து
மிகத்தாழ்த்தி வைக்கப்பட்டோர்
திறமுற்று முன்னேற்றத் திசையினிலே
கால்வைக்க மனம்பொறாதார்
அறவிழிந்த கொடுமையெலாம் அற்றொழிந்த
நாளன்றே விடுதலைநாள்!

சட்டங்கள் பலப்பலவும் செய்தாலும்
முன்னைநாட் சாதியின்கீழ்
மட்டங்கள் எனவைக்கப் பட்டவர்கள்
மனவலியால் எழுச்சிகொண்டு
பட்டங்கள் பதவிகளை எட்டுகின்ற
நிலைகண்டு மனங்குமைவோர்
திட்டங்கள் கொடுமையெலாம் தீர்ந்தொழிந்த
நாளன்றோ விடுதலைநாள்!

சீர்திருத்தம் பலப்பலவும் செய்தாலும்
செற்றார்செய் சாதியாலே
ஊர்பிடித்துத் தள்ளிவைத்த நந்தமிழர்
உரமேறி எழுச்சயுற்று
வேர்பிடித்துத் தளிர்க்கின்ற நிலைகண்டு
மனம்புழுங்கி வாளெடுத்துக்
கூர்திருத்தஞ் செய்வார்செய் கொடுமைவீழ்
நாளொன்றே விடுதலைநாள்!

-இறை

உள்ளே...

* கெடுதலை உலகம்!
* நூல்களை நாட்டுடைமை ஆக்குவதன் நோக்கம்!
* பொன்விழா நாளில் எண்ணங்கள் சில!
* நன்மையும் உண்மையும்
* செவ்வாய்ச் செய்தி
* உலகம் வியக்கும் வீரமரபினர் தமிழர்!
* தமிழ் எண்களும் தமிழன் கடற்காலும்
* சாதித் தீமைகளை ஒழிக்கும் திட்டம்!
* நூல்நிறை
* நமக்கு வந்த மடல்கள்
* செய்திகள்
* மற்றும் பிற

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

திரு. மா.சு. சம்பந்தம் வாழ்க!

அண்மையில் திரு.வி.க. விருதுபெற்றுள்ள திருவாளர் மா.சு. சம்பந்தம் அவர்கள் எழுபத்தைந்து அகவை நிறையப் பெற்றுள்ளார். முன்னாள் மாநகராட்சி உறுப்பினரான அவர், மாநகராட்சியின் நடைமுறையில் ஸ்ரீ, ஸ்ரீமதி என்றிருந்த அடைமொழிகளை திரு என்றும், தமிழென்று கருதித் திருமதி என்றும் மாற்றுவதற்கு முயற்சி மேற்கொண்டு வெற்றி கண்டவர். அவர் எழுதிய அச்சுக்கலை என்னும் நூலே அத்துறையில் தமிழில் வந்த முதல் நூல். சென்னை மாநகர் பற்றிய அவர் நூல் அரிய பல செய்திகளைத் தாங்கியது. தமிழ், இனநல போராட்டங்களில் பங்கேற்ற திரு. மா.சு.சம்பந்தம் அவர்கள் பாவலரேறு அவர்களிடம் 'மொழிப்போர் மறவர்' எனும் பட்டயம் பெற்றவர். அவர் நூறாண்டின் மேலும் நலமுற வாழ்ந்து நற்பணிகளாற்ற வாழ்த்துகிறோம்.

முதுபெரும் புலவர் வி.பொ. பழனிவேலனார்க்கு 90 - ஆம் ஆண்டு நிறைவு விழா ஏற்பாடு

பாவலரேறு ஐயா அவர்களொடு-தென்மொழியொடு நீண்ட காலத் தொடர்புடையவரும், மொழித்தூய்மைக் கோட்பாட்டிலும், பகுத்தறிவு நெறியிலும் ஈடுபாடும் கடைப்பிடியும் கொண்டவரும், உலகத் தமிழ்க் கழகத் தஞ்சை மாவட்டச் செயலாளராக விளங்கியவரும், 'மாணாக்கன்' என்னும் இதழைத் தொடங்கி நடத்திவந்தவருமான முதுபெரும் புலவர் வி.பொ. பழனிவேலனார்க்கு 90 அகவை நிறைவுறுவதை யொட்டி அவரது தொண்டு வாழ்வைச் சிறப்பிக்கும் வகையில் விழா நடத்தவும், மலர் வெளியிடவும் ஏற்பாடுகள் செய்யப்பெற்று வருகின்றன. விழாவும், மலரும் சிறக்கத் தமிழ்நெஞ்சங்கள் துணைநிற்குமாறு வேண்டுகிறோம். தொடர்பு முகவரி : முனைவர் ப. தமிழ்ப்பாவை, 34/6, சின்னகண்ணு தெரு, காரைக்கால், 609 002.

முனைவர் கடவூர் மணிமாறனுக்குப் பரிசு

பாரத மாநில வைப்பகம் (Bharat State Bank) நடத்தும் தமிழ்நூற் பரிசுத் திட்டத்தின் கீழ், 1995 ஆம் ஆண்டின் மரபுப் பாக்களுக்கான மூன்றாம் பரிசு 'சிறகை விரித்த சிந்தனைகள்' என்னும் நூலுக்காக முனைவர் கடவூர் மணிமாறன் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. முதற் பரிசைப் புலவர் இலமா. தமிழ்நாவன் பெற்றிருக்கிறார்.

கெடுதலை உலகம்!

கெடுதலை நிரம்பிய உலகமிது - அதன்
கீழ்மையை வேரறுப்போம் - மக்கள்
விடுதலை பெற்றுய்ய வேண்டுமன்றோ - மூட
வழக்கத்தை நாருரிப்போம்!

மடுவும் மலைகளும் மக்கள் நிலையினில்
மண்டிக் கிடப்பதுவோ - நலங்
கெடவும் உயிர்க்குலம் இங்கொரு மூலையில்
கிடந்து துடிப்பதுவோ? (கெடுதலை)

வானுயர் கூடங்கள் மாடங்கள் ஓர்புறம்!
வாழ்க்கை நலன்கள் பல - அட!
ஊனுடல் நாறும் எலும்புகள் ஓர்புறம்!
உப்பும் புளியும் இல! (கெடுதலை)

சாதி மதங்களும் சாத்திரப் பேய்களும்
சழக்கர்கள் சூழ்ச்சிகளாம்! - தலை
மோதி உடைவதும் மேன்மை குலைவதும்
செந்தமிழ் வீழ்ச்சிகளாம்! (கெடுதலை)

ஆண்டிட வந்தவர் மக்கட் பயிர்களை
அழுகிடச் செய்தனரே! - பலர்
மாண்டிடத் தாம்வளம் பூண்டனர்; ஏழையர்
வாழ்க்கையைக் கொய்தனரே! (கெடுதலை)

மேன்மைதருந் தொழிலாளர் இனங்களை
வேறுபடுத்தினரே! - கொடுங்
கோன்மை புகுத்தி உரிமை எழுச்சியின்
குரமை நெரித்தனரே! (கெடுதலை)

-பாவலரேறு (25.5.81 - கோவைச் சிறை)

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் தி.பி.1990 (1959))

தென்மொழி

மொழி—இனம்—நாடு

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

நம்மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் மூமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

ஆசிரியர் : தாமரை பெருஞ்சித்திரனார்

சுவடி.29) தி.பி. 202அ -மடங்கல் (ஆகத்து -97) (ஓலை.8

நூல்கள் நாட்டுடைமை யாவதாலேயே நோக்கம் நிறைவேறி விடாது!

பாவேந்தர் பாரதிதாசனார் நூல்களையும் மொழிநூன் மூதறிஞர் பாவாணர் அவர்களின் நூல்களையும் நாட்டுடைமையாக்கிப் பெருமை கொண்ட தமிழ்நாட்டரசு அண்மையில் நிறைபுல வேந்தர் மறைமலையடிகளார் நூல்களையும் நாட்டுடைமையாக்கிப் புகழ் நிறுவியுள்ளது. 'தேனும் பாலும் போன்ற தூய தீந்தமிழ்ச் சொற்களால், உரைநடையுஞ் செய்யுளுமாகிய இரு வடிவிலும் பல்துறை தழுவி ஐம்பதிற்கு மேற்பட்ட அருநூலியற்றி, முதலிரு கழக நிலைக்குத் தமிழைப் புதுக்கி அதற்குப் புத்துயிரளித்து மாநிலத்தில் மக்களுள்ள வரை மறையாப் புகழ் பெற்ற மறைமலையடிகளார், புகழுடலெய்தி அரை நூற்றாண்டை அண்மிவிட்ட நிலையிலும் அவர் தம் பிறங்கடையினர்க்குத் தாராளமாகப் பரிவுத் தொகை வழங்கியிருப்பது பெரிதும் பாராட்டத் தக்கது.

அறிஞர் பெருமக்கள் ஆக்கிய அருநூல்கள் சொத்துரிமை அடிப்படையில் அவர்கள்தம் பிறங்கடையினரிடமும், பதிப்புரிமை பெற்ற சிலரிடமும் முடங்கிவிடுதலால் அந் நூல்கள் பதிப்பிக்கப் படுதலிலும் அவற்றின் கருத்துகள் பரவுதலிலும் எழும் சிக்கல்களைத் தவிர்த்து,

அவை தாராளமாக நாட்டு மக்களுக்குக் கிடைக்கச் செய்வதே நூல்கள் நாட்டுடைமை யாக்கப்படுவதன் முதன்மை நோக்கமாகக் கொள்ளுதல்வேண்டும்.பிறங்கடையினருக்கோ பதிப்புரிமையாளர்க்கோ உரிமைத் தொகையோ பரிவுத்தொகையோ வழங்குவது இரண்டாவது நிலையே.

இவ்வாறு நாட்டுடைமை யாக்கி விட்டுவிடுவதனால் 'அந்நூல்களை யார் வேண்டுமானாலும் பதிப்பிக்கலாம்; விற்பனை செய்து கொள்ளலாம். யாருக்கும் உரிமைத் தொகை தர வேண்டியதில்லை; அதனை ஒட்டு மொத்தமாக அரசே வழங்கிவிட்டது, என்ற நிலை மட்டும்தான் உள்ளது.

அறிவராய்ச்சி நூல்களெல்லாம் புதினங்கள் முதலியன போலப் பொதுமக்கள் விரும்பிப் படிப்பன அல்ல. எனவே, நாட்டுமை யாக்கிவிட்டதனாலேயே அறிஞர்தம் நூல்களெல்லாம் தம் இலக்கை எட்டிவிடுமென்று கொள்ளமுடியாது. வணிக நோக்கமே கொண்ட பதிப்பகத்தார் எவரும் இத்தகைய நூல்களை அக்கறையோடு முறையாக வெளியிட முன்வரார். முன்வரினும் அவற்றை எளிய விலையில் விற்பனை செய்ய இயலாது

பிறங்கடையினரோ வெனில் இந்நூல்களுக்கென்று அரசிடமிருந்து பெற்ற தொகையைக் கொண்டு ஒருவாறு வாழ்க்கையை நலப்படுத்திக் கொள்வதில் நாட்டஞ் செலுத்துவார்களே யல்லாமல் இந்நூல்களை அச்சிட்டு வெளியிடுவதற்கு அப்பொருளைச் செலவிட அவர்கள்தம் வாழ்க்கைச் சூழல் இடந்தராது. இதுவே கண்கூடு.

மக்கள் நல முயற்சிகளுக்கு முன்னோடிகளாகவும் வழிகாட்டிகளாகவும் திகழ்ந்த அறிஞர் பெருமக்களின் அரிய நூல்கள், தொடர்ந்து வரும் குமுகாயத்திற்கு எளிதிற் கிட்டும் வகையில், நாட்டுடைமை யாக்கப்பெற்ற நூல்களைச் சிறப்புப் பதிப்பாக வெளிக்கொணர்தற்கு ஆவன செய்தல் இன்றியமையாதது

அரசே, வெளியீட்டுத் துறை வாயிலாகவோ, முறையுற வெளியிட முன்வருவார்க்குத் தக்க நல்கை வழங்கியோ நாட்டுடைமையாக்கப் பெற்ற நூல்களைச் சிறப்பாக வெளியிட ஆவன செய்தல் வேண்டும்.

நாட்டுடைமை யாக்கப்பட்ட இந்நூல்களைப் பொதுவகையான மற்றை நூல்கள் போலன்றிச் சிறப்புப் பட்டியலிட்டு அரசுப் பொது நூலகங்கள், பள்ளி, கல்லூரி, திருக்கோயில் நூலகங்கள் யாவற்றிலும் இடம்பெறச் செய்தல் இன்றியமையாதது.

நூலாசிரியரின் பிறங்கடையினர்க்கு வழங்கும் தொகையில் ஒரு பாதியைத் தொகையாக வழங்கிவிட்டு, மறுபாதியை இவ் வெளியீட்டுக்குப் பயன்படுத்திக்கொண்டு அதன் வருவாயைத் தொடர்ந்து அவர்கட்கு வழங்கினும் நன்றே.

- இறை

பொன்விழா நாளில் எண்ணங்கள் சில..

-கடுங்கோ-

ஆங்கிலேயரின் ஆளுமைப் பிடியினின்றும் இந்தியப் பெருநிலம் விடுபட்டு ஐம்பதாண்டுக் காலம் கடந்துவிட்டதை யொட்டி எங்கணும் வண்ணமிகு பொன்விழாக் கொண்டாட்டங்கள் நடத்தப்படுகின்றன. விடுதலைக்காகப் பாடுபட்ட வீரச் செம்மல்களில் ஈகங்களை நாம் நினைவுத் திரையில் நிழலாடுவதைத் தொடர்ந்து விடுதலையின் விளைவான இன்றைய இந்தியக் கட்டமைப்பின் நடைமுறை நிலைகளையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது.

விடுதலை பெற்ற காலமுதலே திட்டமிட்ட கட்டாயக் கல்வியைச் செயற்படுத்தியிருந்தால் இன்று அறுபது அகவையினர் யாரும் அடிப்படைக் கல்வியறிவும் இல்லாதவர்களாக இருக்க முடியாது. ஆனால் இன்றைக்குங்கூட இளஞ்சிறுவர்கள் பள்ளிக்குச் செல்லாமலும் - செல்ல முடியாமலும் வயிறு வளர்ப்பதற்கும் குடும்பப் பொறுப்பேற்றும் கூலி வேலைக்கு அலையும் நிலையில் தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிப்பதுபோல் முதியோர் கல்வி, அறிவொளி இயக்கம் போன்றவற்றுக்கு வெற்றிவிழாக்கள் நடைபெறுகின்றன.

இனிக் கல்விக் கூடத்துக்குச் செல்லும் வாய்ப்புப் பெற்றாலும், அங்குக் கால்வைக்கும் போதே நன்கொடை என்ற பெயரில் கையூட்டுக் கொடுத்துவிட்டுத்தான் உள்ளே நுழைகிறான் மாணாக்கன். ஆசிரியரும் வேலையை விலை கொடுத்து வாங்கிக் கொண்டுதான் வருகிறார். இப்படிக் குருடும் குருடும் குருடாட்டம் ஆடும் நிலையில் எத்தகைய குமுகாயம் உருவாகும்? விதையொன்று போடச் செடியொன்று முளைக்குமா?

விடுதலை பெறுதற்கு முன்பிருந்தே பொதுமொழியென்றும், அலுவல்மொழி யென்றும், தேசியமொழி யென்றும், ஆள்வினை (நிர்வாக) மொழி யென்றும், பெயர் சூட்டி இந்தியை வளர்க்கவும் பரப்பவும் கொட்டியழுத பல்லாயிரங் கோடிப் பணத்தை, அவ்வப் பைதிரத்தார்தம் தாய்மொழி வளர்ச்சிக்கும் கல்வி வளர்ச்சிக்கும் செலவிட்டிருந்தால் கல்வித் தரமும் மக்கள் நிலையும் எத்துணையோ மேம்பட்டிருக்கும்!

எல்லோரும் ஓர்நிறை ஒரு சமம் என்றும் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்றும் முழக்கமிட்டு விடுதலை பெற்று ஐம்பதாண்டுக் காலத்திற்குப் பின்னும் பிறவிக் குலமான சாதியின் அடிப்படையில்தான் திருக்கோயிற் கருவறைக்குள் நுழைய முடியும்

என்றஎ நிலை நீடிப்பதும், தீண்டாமை கடுங்குற்றமென்பது இன்றும் சொல்லளவிலேயே இருக்க, நடைமுறை அதற்கு மாறாக இருப்பதும், மட்டுமன்றி சட்டப்படியே கூடச் சில சாதியினர் தேர்தலில் நின்றாலும் வென்றாலும் அவர்களுடைய உயிருக்கு உறுதியில்லை; கொன்று குவிக்கப்படுகிறார்கள், கொடுமைகளுக்கு ஆளாகிறார்கள் என்றால் எத்துணை வெட்கக்கெடு!

நாட்டின் முதுகெலும்பு என்று வண்ணிக்கப்பட்ட உழவுத் தொழில் இன்று நலிவடைந்துவிட்டது. அம்முதுகெலும்பு முறிக்கப்பட்டு நொறுக்கப்பட்டு வருகிறது. விளைநிலங்களெல்லாம் வெற்று நிலங்களாக எளிதில் சான்றளிக்கப்பட்டு வீட்டுமனைகளாக மாறுகின்றன. இன்னொரு பக்கம் இறால் பண்ணைகள் முதலியவற்றால் உப்பங்கழிகளாகத் திரிகின்றன. மற்றொரு பக்கம் ஆலைக் கழிவுகள் ஆறுகளிலும் பாசனக் கால்வாய்களிலும் கலந்து பயிர் பச்சைகளைப் பாழ்படுத்துகின்றன; நிலவளத்தையும் கெடுக்கின்றன. இந்நிலையில், அயல்நாடுகளில் தீங்கானவை யென்று கழித்துக் கட்டப்பட்ட ஆலைகளெல்லாம் இங்கு ஆரவாரத்தோடு வரவேற்கப்படுகின்றன. எதிர்ப்புகள் எழுந்தாலும் அவை எடுபடவில்லை! வேளாண்மை யாராலும் விரும்பப்படாத தொழிலாக ஓரங்கட்டப் படுகிறது. வேறு வழியில்லாதவர்கள் மட்டுமே அதில் ஈடுபடும் நிலையுள்ளது!

வெள்ளையரை எதிர்த்து உப்புக் காய்ச்சும் உரிமைக்காக அறப்போர் நடத்திய நினைவிடத்தில் சிறப்பாக விழாக் கொண்டாடப்பட்டதாம். உரிமை கொழிக்கும் இன்றைய இந்தியாவில் சீனி முதலான விளைவாக்கங்களும் இறால் முதலான கடற் பொருள்களும் அயல்நாட்டு ஒப்பந்தக் கடன்காரர்களுக்கு அனுப்பட்டுவிடுதலால் ஏழை எளியவர்களுக்கு அவை எட்டாப் பொருள்களாகவும், கண்ணாற் காணவுங் கிட்டாப் பொருள்களாகவும், சிலவற்றின் கசடுகள் மட்டுமே நுகர்ச்சிக்குரியனவாகவும் இருக்கும் நிலைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் நாள் எந்நாள்?

இங்குப் பேருந்துக் கட்டணம் எவ்வளவு என்கிற வரையறைகூட இந்தியாவுக்குக் கடன் கொடுத்தவர்கள் கண்ணசைவின்படிதான் செய்ய வேண்டும் என்ற நிலையிருப்பதுதான் விடுதலை பெற்றதன் பயனா?

வெளிநாட்டு முதலீடுகள் என்னும் பெயரில் உள்நாட்டுத் தொழில் நிறுவனங்களை யெல்லாம் ஒழித்துக் கட்டுவதுதானே இன்று நாம் காணும் தாராளமான பொருளியல் புரட்சி!

இனி, இந்தியா முழுவதும் - நடுவத்திலும் மாநிலங்களிலும் ஒரே கட்சியின் ஆட்சி என்ற நிலை மாறியதோடு, நடுவண் நிலையில் ஒரே குடும்பம், ஒரே மாநிலம், ஒரே கட்சி, ஒரே திசை என்ற பிடிப்புகளினின்றும் படிப்படியாக விடுபட்டு வெவ்வேறு கட்சிகளும் கூட்டணிகளும் ஆட்சியமைக்கும் வாய்ப்பேற்பட்டிருப்பது நல்ல அறிகுறியாகவே தெரிகின்றது. இந்தியா ஒன்றிய நாடுகளின் கூட்டமைப்பாக உருவாகும் நிலைக்குத் தள்ளிச் செல்லப்படுவதாகவே கொள்ளலாம். இதற்கிடையில் மதவெறிக் கட்சிகளின் சாய்கால் பெருகிவருவது இப்போதே பெரும்பாலும் நாட்டுப்பண் வடிவிலும் மாணாக்கர்களின் பொதுக்கட்டுரை தலைப்புகளுள் ஒன்றாகவுமே இருக்கும் ஒருமைப்பாட்டுக்கு உலை வைப்பது உறுதி!

அனைத்திந்தியக் கட்சிகள் எனப்படுவன வெல்லாம் தலைவர்கள் கூட்டமாகவும், மக்கள் சாய்கால் பெறாதனவாகவும் இருப்பது மட்டுமன்றித் தேசியத் தலைவர்கள் எனப்படுவோர் சிலை வடிவிலுங்கூடப் படைக்கருவிகள் தாங்கிய காவல் துறையினர் பாதுகாப்போடுதான் மக்களிடையே நிற்க முடியும் என்பதுதான் இன்றைய வெளிப்படையான நிலை!

எதிர்கால இந்தியா இன்றைய இந்தியாவினின்றும் முற்றிலும் வேறுபட்டதாகவே இருக்கும்!

தென்மொழி நன்கொடை வரவுகள்
(1.7.97 முதல் - 14.8.97 முடிய)

1. எழில்வாணன்	நெடும்பரம்	-	2.00
2. மின்னல்கிழார்	பூட்டுத்தாக்கு	-	10.00
3. அருள்மணி -	வெங்காலூர்		20.00
4. அழகுநிலவன்	புதுக்கோட்டை	-	4.00

ஒரு திருத்தம்

தென்மொழி சென்ற இதழ் (சுவடி : 29; ஓலை : 7) 9 ஆம் பக்கத்தில் இடம்பெற்றுள்ள (வரி : 30-31) "த.நா.மா.இலெ. பொதுச் செயலாளர் கி.வே. பொன்னையன்" என்று இருப்பதைத் "திரு. பொன்னையன் (த.நா.மா.இலெ. கட்சி)" என்று படித்துக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

-ஆசிரியர்.

செவ்வாய்ச் செய்தி

துரை. மா. பூங்குன்றன்

இவ்வுலக உருண்டையில் வாழும் உயிரினங்களைத் தவிர்த்து இப் பேரண்டத்தில் வேறெங்கேனும் உயிர்கள் வாழ்ந்து கொண்டிருக் கின்றனவா என்ற தேடுதலின் முயற்சிதான் இன்று செவ்வாய்க்கோளில் இறங்கிய விண்கல ஆய்வுகள்.

கடந்த ஆண்டு இறுதியில் அமெரிக்க விண்வெளி நிறுவனம் செலுத்திய விண்கலம் 4950 இலக்க அயிரமாத்திரி (kilometer) தொலைவு கடந்து ஏழு திங்களுக்குப் பின் சூலை மாதம் 4 ஆம் நாள் செவ்வாய்க்கோளில் தரையிறங்கியது. இக் கலத்தில் 'தடம்நோக்கி' (Path finder) என்ற எந்திர ஆய்வுக்கலம் வைக்கப்பட்டிருந்தது. தரையிறங்கிய மறுநாள் தடம்நோக்கி வெளிவந்து செயல்படத் தொடங்கிச் செய்திகளை உலகிற்கு அனுப்பி வருகிறது.

தடம்நோக்கி என்ற ஆய்வுக்கலம் ஆறு சக்கரங்களைக் கொண்ட ஒரு நகரும் ஊர்தி. வேறுகோளில் இயக்கப்படும் முதல் தரையூர்தி இதுதான். அதன்பின் மூன்று படப்பிடிப்பான்கள் இயங்கத் தொடங்கின. ஊடுகதிர் நிறமானி (Alpha Proton X-ray Spectro-meter) அங்குள்ள பாறைகளை ஆராயத் தொடங்கிற்று. தன் மின்னணு நாவினால் பாறைகளை இது வருடி ஆராயும். செவ்வாய்ப் பாறைகளை ஆராயும்போது அவை நிலவுருண்டையில் உள்ள பாறைகளையே ஒத்த படிநிலை வளர்ச்சியைப் பெற்றுள்ளன.

செவ்வாய்க்கோளைப் பற்றிய ஆய்வுகளில் செய்திகளைத் திரட்டச் சோவியத்து நாடுதான் முதன்முதலில் விண்கலங்களை ஏவியது. 1964-இலிருந்து மாரினர், மார்சு என்ற பெயரில் பல கலங்கள் வரிசையாக ஏவப்பட்டன. மார்சு 3 என்ற ஆய்வுக்கலம் 1971இல் செவ்வாயில் தரையிறங்கியது. மார்சு 3 என்ற கலம் பல புதிய செய்திகளைச் செவ்வாய் பற்றித் தந்தது. செவ்வாய்க் கோளில் மிகக் குறைந்த காந்தப் புலத்தைப் பற்றிய செய்தியெல்லாம் மார்சு 5 தந்தவையே.

அமெரிக்க நிறுவனத்தின் இந்தச் செவ்வாய் ஆராய்ச்சி 21 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தொடங்கப்பட்டதாகும். 1976ஆம்ஆண்டு ஏவப்பட்ட 'வைக்கிங்கு-2' என்ற விண்கலம் திடீரெனத் தொடர்புத் துண்டிப்பில் மறைந்து விட்டது. அதன்பின் நெடுநாள் ஆய்வு தொடரப்படாமலேயே இருந்தது. 1993இல் செவ்வாய்க் கோளிலிருந்து வந்து வீழ்ந்த விண்கற்களை ஆராய்ந்து, 'செவ்வாய்க்

கோளில் மாழைகளும், நீர்க்கரிமங்களும் (Hydrocarbons), நுண்படிவு (Micro fossils)களும் நிறைந்துள்ளன என்றும், எனவே முதல் கோடியாண்டுகளுக்குள் அங்கு உயிரினங்கள் வாழ்ந்த சான்றுகள் நிரம்ப உள்ளன என்றும் வெளியிட்டிருந்தனர்.

ஏற்கெனவே வைக்கிங்கு எடுத்த படங்களையும் தரவுகளையும் வைத்துக்கொண்டு ‘ஏரியசு’ என்ற சமவெளி ஒன்றை நிலவியலார் தேர்ந்தெடுத்தனர். இவ்விடம் பெருவெள்ளத்தால் ஏற்பட்ட சமவெளி. இவற்றையெல்லாம் கொண்டு சூலை 4 இல் தரைக்கட்டுப்பாட்டாளர்கள் இவ்விடத்தில் தரையிறக்க முடிவு செய்தனர். தரையிறங்க ஒரு மணி நேரத்திற்கு முன்பு செவ்வாயின் ஈர்ப்பு விசைக்குத்தக ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட கணிப்பொறிக் கட்டளையின்படி ‘தடம்நோக்கி’ தானே இயங்கத் தொடங்கியது. செய்கைகளை உலகிற்கு அனுப்பியது. அதற்குத்தகக் கட்டளைகள் உடனுக்குடன் செலுத்தப்பட்டன. அரை மணி நேரத்திற்குப்பின் கீற்றுகளுடன் செவ்வாயின் வளிமண்டலத்திற்குள் கிழித்துக்கொண்டு உள் நுழைந்தது கலம். செவ்வாயின் வளிமண்டலம் செவ்வாயைச் சுற்றி மிகவும் மெல்லிய அளவிலேயே உள்ளது. 13.9° கோணத்தில் குறைவான உராய்வுடன் நுழைந்திருப்பினும் காப்புறைகள் அவ்விருளில் சிவந்து ஒளிர்ந்தன. தரையிறங்க இரு நிமையங்களுக்கு முன் விரிக்கப்பட்ட குடைவிரிப்பு (Parachute) மூலம் தாங்கப்பட்டுப் பந்துபோல் கவனமாகக் கலம் தரையிறக்கப்பட்டது.

செவ்வாயின் வளிமண்டலம் மிகுதியான கரிமவளியால் ஆனது. வளிமண்டல அழுத்தமும் உலக வளிமண்டலத்தினும் குறைவானது.

இப்போது 'தடம்நோக்கி'க் கலம் அனுப்பிய தரவுகளின்படி நடுப்பகல் மிகு வெப்பமே - 22.2^0 செலிசியசு. வானம் முகிலற்று மிகத் தெளிவாக உள்ளது.

இப்போது இறங்கிய 'ஏரியசு' சமவெளியில் உள்ள 'மார்டியன்' நிலப்பகுதியில் இப்போது நீர் இல்லை. ஆனால் அறிவியலார் நீர் நிறைந்த கோளமாகக் கணக்கிடுகின்றனர். வடமுனையில் உறைநீர் இருக்கலாம். அதேபோல் நிலத்தடியிலும் நீர் மிகுந்து இருக்கலாம் எனக் கருதுகின்றனர். மார்டியன் பகுதி ஒருகாலத்தில் பெருவெள்ளம் ஓடிய பகுதியாக இருக்க வேண்டும். நீர் இங்கு இருந்திருப்பதால் உயிர்கள் வாழ்ந்திருப்பதற்கான தடயங்களை நோக்கி ஆய்வுகள் செல்லுகின்றன.

உலகைப் போலவே பருவக் கால மாறுதல்கள் அங்கும் ஏற்படுகின்றன. முனைகளில் உறைபனிகளும் எரிமலைகளும் உலகோடு



ஒத்துக் காணப்படுகின்றன. இருப்பினும் இப்போது அங்கு உயிர்கள் நிலவவில்லை. இப்போது இங்கு மட்டும் உயிர்கள் நிலவிக்கொண்டிருப்பதற்கு என்ன சூழல்கள் இருக்கின்றன என்பது பற்றியும், உயிர்கள் இங்குத் தோன்றுவதற்குமுன் எவ்வாறு இருந்தது; அத்துடன் எதிர்காலத்தில் ஏற்படும் மாற்றங்களில் உயிர்கள் நிலைத்திருக்குமா அல்லது செவ்வாய் போலப் போகுமா என்பனவெல்லாம் முகாமையான ஆய்வுகளாக உள்ளன.

1969-இல் முதன்முதலில் மாந்தன் நிலவில் இறங்கிப் பல செய்திகளை அறிந்துகொண்டான். இப்போதோ தலைசிறந்த அறிவியல் கருவியொன்றைச் செவ்வாயில் இறக்கிப் பல செய்திகளை அறிந்து கொள்கிறான். வருகிற புதிய நூற்றாண்டின் முதற்பகுதியிலேயே மாந்தன் செவ்வாயில் இறங்கிவிடுவான் என்று அறிவியல் உலகம் நம்புகிறது.

செவ்வாய்க் கோளம் சிவப்பாக இருப்பதைக் கண்டதும் கிரேக்க நாட்டினர், அவர்களின் போர்க் கடவுளின் பெயரான 'மார்சு' என்ற பெயரை அதற்குச் சூட்டினர். நமக்கு ஒரு துணைக் கோளாக நிலவு இருப்பதுபோல் செவ்வாய்க் கோளுக்கு இரு துணைக் கோள்கள் உள்ளன. அவற்றிற்கு 'போபோசு' (Phobos அச்சம்), 'தெய்மாசு' (Deimos-Terror) எனப் பெயர். உலக உருண்டையைப் போல் அரை மடங்கு பருமம் கொண்டது செவ்வாய்க்கோளம் (விட்டம் 6787 அயிரமாத்திரி). வளிமண்டிலமோ மிக மெல்லிய அளவில் சுழன்றுள்ளது. அவ்வெளியில் கரிமவளி மிகுதியாகவும் உவர்வளி(nitrogen) செயலில் வளி (Argon) குறைவான அளவில் உள்ளன. நீர்மவளி (Water Vapour) காணப்படுகிறது.

செவ்வாயில் ஒரு நாளைக்கு 24 மணி 37 நிமையங்கள். ஒருமுறை செவ்வாய் கதிரவனைச் சுற்றிவர அதாவது செவ்வாயில் ஓர் ஆண்டுக்கு 687 உலக நாட்கள் ஆகின்றன.

மாந்தனோ உயிரினங்களோ வேறெங்கேனும் இருந்துவிடக்கூடாதா என்ற ஒரு தனிமையுணர்வு உலக மாந்தர்களிடைத் தோன்றிவிட்டது. இந்த ஆய்வுகளுக்கெல்லாம் அடிப்படை இதுவேதான். புதிய கண்டங்களைக் கண்டுபிடித்து அவற்றில் மாந்தன் வாழ்கிறானா? என்று அறியும் ஆவல் சென்ற நூற்றாண்டு வரை இருந்தது. அமெரிக்கக் கண்டங்கள் அவ்வாறே கண்டுபிடிக்கப்பட்டன. அதே ஆர்வத் தொடர்ச்சிதான் இன்றைய செவ்வாய்ச் செலவு.

பொதுவாக ஒரு கேள்வி மட்டும் நிலவுகிறது. விரைவில் மாந்தன் செவ்வாய்க்குச் செல்லலாம். அங்குக் குடியேறவும் செய்யலாம். ஆனால் அண்டவெளியில் அவனின் தனிமையுணர்விலிருந்து அவன் மீள முடியுமா?

தமிழ் எண்களும் தமிழன் கடற்காலும்

தென்மொழியின் பக்க எண்கள் தமிழ் வடிவிலும், நடைமுறை வடிவிலும் இருப்பதுபோல் முகவரியிலும் தொலைபேசி எண்ணிலும் இருவகை வடிவும் இடம்பெற்றால்தான் அடிமைத் தமிழன் மனத்தில் தமிழ் எண்கள் பதியும். அவ்வாறு செய்வீர்களா ?

-புலவர் மு. சொரணம், திருவைகுண்டம்.

அரபு எண்கள் என்னும் பெயரில் இன்று உலகெங்கும் வழங்கிவரும் எண்கள் நம் முன்னோர்தம் அயல்நாட்டுத் தொடர்புகளால் அங்குச் சென்று சிறிது வடிவந் திரிந்த தமிழ் எண்களே. தொன்மைச் சிறப்புக் கருதியும், ஒன்றன்கண் அமையும் உட்பிரிவுகள் முதலியவற்றுக்கான தேவை நோக்கியும் பழைய தமிழ் எண்களை நாம் பயன்படுத்தினாலும் பெருவழக்காக நடைமுறையில் உள்ள எண்களைக் கையாள்வது தவறாகாது.

'பாக்'குச் சலசந்தி என ஆங்கிலேயர் சூட்டிய பெயரை அகற்றிவிட்டு அதற்குத் தமிழன் கடற்கால் என்று பெயர் சூட்டுமாறு அண்மையில் இராமேசுவரத்தில் நடைபெற்ற கச்சத்தீவு மீட்பு மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பது பற்றி.... ?

-- ந. ஆலமர்செல்வன், சவூதி.

அத்தீர்மானத்தை நாமும் வழிமொழிகிறோம். கடந்த காலத்தில் இத்தகைய வரலாற்றுப் பதிவுகளில் அக்கறை கொள்ளாதிருந்தமையாலேயே தமிழினம் இன்றும் தலைநிமிர முடியாத நிலையில் உள்ளது. குமரிக் கண்டம் பற்றிய உண்மை உலகறிய நிறுவப்பெற்றிருந்தால், கடல்கோள்களுக்குத் தப்பிய அக்குமரிக்கண்டத்தின் எச்சமான இலங்கையில் வாழும் மண்ணின் மைந்தர்களான தமிழ் மக்களைப் பிழைப்புத்தேடி வந்தேறிகள் என்று சிலரும், நாம் வாழும் தமிழகம் தாய்நாடு; தமிழீழம் சேய்நாடு என்று சிலரும் பிதற்றித் திரியமாட்டார்கள். பல தீய விளைவுகள் தவிர்க்கப்பெற்றிருக்கும்.

ஆகவே, 'பாக்'குச் சலசந்தியைத் தமிழன் கடற்கால் என்று பெயர்மாற்றம் செய்வதோடு, இந்தியப் பெருங்கடல் என்னும் பெயரையும் குமரிக் கண்டத்தை நினைவுகூரும் வகையில் குமரிப் பெருங்கடல் என்று மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

-குரிசில்

'கூலிகள்' -'கொத்தடிமைகள்' என்ற நிலை இன்றில்லை!

தமிழர்கள் வீரமரபினர் என்று உலகம் வியந்து நோக்குகிறது!

பாவலரேறு நினைவேந்தல் நிகழ்ச்சியில் திரு. பழ. நெடுமாறன்.

"தமிழர்களைக் கூலிகள், கொத்தடிமைகள் என்றே உலகம் கருதிப் பயன்படுத்தி வந்தது. அந்த நிலை தமிழீழப் போராளிகளால் இன்று மாறிவிட்டது. தமிழர்கள் என்றால் புலிகளா என்று அஞ்சுகிறார்கள்; தமிழ்மக்கள் வீர மரபினர் என்று வியந்து நோக்குகிறார்கள் என்று, கடகம் 4 அன்று (20.7.'97) சென்னை - அரும்பாக்கத்தில் நடைபெற்ற பாவலரேறு நினைவேந்தல் நிகழ்ச்சியில் பங்கேற்றுச் சிறப்புரையாற்றிய தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு. பழ. நெடுமாறன் அவர்கள் குறிப்பிட்டார்.

திரு. பழ. நெடுமாறன் அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு:

பாவலரேறு அவர்கள் பல்வேறு அல்லல்களுக்கிடையிலும், கடுமையான வறுமையிலும் - எந்தச் சூழ்நிலையிலும் கொள்கையில் உறுதியாக இருந்தவர். ஒடுக்குமுறைச் சட்டத்தின் கீழ் அவரையும் என்னையும் சிறைப்படுத்தியிருந்தார்கள். ஐயா அவர்கள் சிறையில் இருந்த போதும் திருக்குறள் மெய்ப்பொருளுரையை எழுதிக் கொண்டிருந்தார். 'சிறையிலிருந்து வருமுன் எழுதி முடிப்பேன்' என்று அப்பணியில் முனைப்பாக இருந்தார்.

நான் சிறையிலிருந்து பிணையலில் வெளிவந்தபோது சிறையதிகாரிகளிடம் நகைச்சுவையாகக் கூறினேன், 'ஐயாவை வெளியே விடாதீர்கள்; விட்டால் திருக்குறள் மெய்ப்பொருளுரை எழுதும் பணி தடைப்பட்டுவிடும்' என்று.

பாவலரேறு அவர்கள் தமிழருக்கு உணர்வூட்டும் தலைவராக இருந்தார். எத்தனையோ இளைஞர்களுக்கு அவர் தமிழ் உணர்வை -வீர வுணர்வை யூட்டினார். வரும் தலைமுறைகள் அவரது அரும்பணியைக் கண்டு வியக்கும். நாம் அவரைச் சரியாக உணர்ந்து போற்றவில்லை. நம்முடைய அரசோ நாமோ அவருக்கு உதவவில்லை.

கொலம்பியாவில் வில்டொனால்டு என்ற அறிஞர் நாகரிக வரலாறு என்ற, ஒன்பது தொகுதிகள் அடங்கிய நூலை எழுதினார். அவரது முப்பத்திரண்டாவது அகவையில் கொலம்பியாப் பல்கலைக் கழகப் பேராசிரியராகப் பணியாற்றும் போது இராக்குபெல்லர் அறக்கட்டளை அவருக்கு உதவ முன்வந்தது. அவர் உலகம் முழுதும் சென்று மாந்தக்குல

வரலாற்றை ஆய்ந்து தமது நூலை எழுதி முடித்தார். உலகின் சிறந்த நூல்களுள் அவரது நூலும் ஒன்று. பாவலரேறு போன்றவர்களுக்கு அத்தகைய நிலை வாய்க்கவில்லை.பாவாணர் அவர்களும் பாவலரேறு அவர்களும் எளிய வாழ்க்கை வாழ்ந்தவர்கள். நாம் முறையாக உதவியிருந்தால் எத்தனையோ அறிவுக் களஞ்சியங்கள் நமக்குக் கிடைத்திருக்கும். அவர்களைப் போல் கொள்கை உறுதியோடு அரும்பணிகளை ஆற்றி வாழ்வதற்கு நாம் சூளுரை மேற்கொள்ள வேண்டும்!

தமிழ்நாட்டில் காவிரிச் சிக்கல் தொடர்பாகத் தமிழர்களின் குரல் ஒன்றுபட்டு ஒலிக்கவில்லை. கர்நாடகத்தில் அனைத்துக் கட்சியினரும் கட்சியுணர்வை மீறிக் கன்னடர்கள் என்று ஒன்றிணைந்து நிற்கின்றனர். தில்லி அதற்கு அஞ்சுகிறது. தமிழர்களிடம் ஒற்றுமை வராது என்று அவர்கள் நம்புகிறார்கள். காவிரி நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பு கர்நாடகத்தில் மதிக்கப்படவில்லை. தேசிய ஒருமைப்பாடு பேசும் அனைத்திந்தியத் தலைவர்கள் யாரும் கர்நாடகம் தேசிய ஒருமைப்பாட்டுக்கு எதிராக இருப்பதைக் கேட்கவில்லையே ஏன்? தமிழகத்துக்கு எதிராக நடக்கும் நிகழ்ச்சிகளை எதிர்க்கத் தமிழர் கட்சிகள் ஒன்றுபட வேண்டுமா, வேண்டாமா?

தமிழீழப் போராட்டம் பகுத்தறிவுத் தந்தை பெரியாரின் கொள்கைகளை நடைமுறைப்படுத்தி வருகிறது. ஒரு பெரிய குமுகாயப் புரட்சி அங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆடவர்க்குச் சமமாக மகளிரும் அங்குக் களத்தில் நின்று போராடி வருகிறார்கள். அங்கே யாரும் சாவுபற்றிச் சிறிதும் அஞ்சுவதில்லை. தளபதி மில்லர் முதல் ஈகி. வெடிமருந்துச் சரக்குந்தோடு சென்று மோதி மும்மாடிக் கட்டடத்தைத் தகர்த்த வீரமகன். அங்கே முழுச் செங்கல் ஒன்றைக்கூடப் பார்க்க முடியவில்லை. அப்படியாயின் அவரது உடலம் எப்படிச் சிதறுண்டு போயிருக்கும்! மில்லரின் தாயார் ஓர் ஏழைப் பெண்மணி. மில்லரைப் பெற்றதற்கும் அவரது இறப்புக்கும் பெருமைப்படுவதாகக் கூறினார்.

நம் கழக (சங்க) இலக்கியங்களிற்கூடப் பெண்கள் கருவியேந்திப் போராடியதாகச் செய்தியில்லை. நீண்ட காலத் தமிழின வரலாற்றிலேயே பெண்கள் கருவியேந்திப் போராடுவது தமழீழத்திலேதான்! தமிழரைக் கூலிகள் என்றே உலகம் கருதி வந்தது. தமிழ் மக்கள் கொத்தடிமைகளாகவே பயன்படுத்தப்பட்டனர். ஆனால் இன்று தமிழரைப் பார்த்து மற்றவர்கள் அஞ்சுகிறார்கள். தமிழர் என்றால் புலிகளா என்று கேட்கிறார்கள். ஒன்றரை இலக்கம் அமைதிப் படையினர் தோல்வி கண்ட பின்பு தமிழர்கள் வீரமரபினர் என்று வியந்து நோக்குகிறார்கள்.

தமிழ்மொழி, தமிழினம் தமிழ்நாடு என்ற உணர்வோடு வாழ்நாள் முழுதும் பாடுபட்ட பாவலரேறு பெருஞ்சித்திரனார் நினைவேந்தல் நிகழ்ச்சியையொட்டி இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்துச் செயல்படவேண்டும்.

-இவ்வாறு தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு. பழ. நெடுமாறன் அவர்கள் உரையாற்றினார்.

சாதி ஒழிப்பு - பாவலரேறு திட்டம்

இதுவரை சாதியொழிப்புக்குக் கலப்பு மணம், மன மாறுபாடு, கருத்துப் பரப்புதல், சட்டமிடுதல் முதலிய பல திட்டங்களையும் அறிஞர்களும் அரசும் அறிமுகப்படுத்தியும், ஓரளவு செயற்படுத்தியும் வந்துள்ளனர். இவற்றுள் மன மாறுதல் என்பது அறிவும் பொதுமையுணர்வும் வளர, வளர உருவாவது. இதுநாள் வரையும், இனியும் இம்முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வந்ததும் வருவதும் இன்றியமையாததே. நாகரிகமும் பண்பாடும் வளர்ந்த நிலையில் இம்மனவுணர்வு சிறிது சிறிதாக நெகிழ்ச்சி கொள்வதும் உண்மை. இதுதவிர இன்றைய நிலையில், சில அரசு முயற்சிகள் தேவைப்படுகின்றன.

அது தொடர்பாக இங்கே தரப்பெறுகிற, நன்கு புலனாய்ந்த ஒரு செயல்முறைத் திட்டம் உண்மையிலேயே வினையாக்கத்திற்கு வருமானால் நல்ல பயன் விளையும் என்று நாம் மனமார நம்புகின்றோம். அத்திட்டம் இது :

இச் சாதியொழிப்புத் திட்டம் ஐந்து படிநிலையாகச் செயல்படுத்தும் முறைகளைக் கொண்டது. அவற்றைப் படிப்படியாகப் பார்ப்போம்.

1.) புறநிலைச் சீராக்கங்கள் : (முதல் நிலை - ஐந்தாண்டு)

இத்திட்டம் செயலுக்கு வந்த நாள்முதல் ஐந்தாண்டுகள் முயற்சி பற்றியது இது.

1. சாதிப் பெயர்களைத் தம் பெயர்களுடன் இணைத்து எழுதுவதற்குத் தடை இடுவது.
2. சாதிப் பெயர்கள் இணைந்த வீட்டுப் பெயர்கள், கடைப் பெயர்கள், நிறுவனப் பெயர்கள், அறக்கட்டளைப் பெயர்கள், பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகப் பெயர்கள், தெருப் பெயர்கள், சிற்றூர்ப் பெயர்கள், ஊர்ப் பெயர்கள் முதலியவற்றிற்குத் தடையிட்டு அவற்றை மாற்றியமைப்பது.
3. சமயத் தொடர்பான சாதி விழாக்கள், சாதித் தெய்வங்கள் இவற்றுக்குத் தடையிடுவது.
4. சாதிகள் தொடர்பான ஒட்டுமொத்த இணைப்பு முயற்சிகள், கூட்டங்கள், மாநாடுகள், சிறப்பு வெளியீடுகள் முதலியவற்றுக்குத் தடையிடுவது.

5. பள்ளி, கல்லூரிப் பதிவுகளில் சாதிப் பெயர்ப் பதிவுகளை நீக்கி, பின்வரும் திருத்த நிலைகளுக்கு ஏற்பக் குறியீடுகளை இடுவது. இவற்றை முதல் ஐந்தாண்டுக்குள் செய்து முடித்துக் கொள்ளுதல் வேண்டும்.

6. சலுகைமுறைக் கல்வி, தொழில் ஈடுபாடுகளை முதல் ஐந்தாண்டில், அவற்றை விரும்பி வேண்டுவோர் கருத்துக்கிணங்க இன்றுள்ள நிலைகளை அப்படியே தொடரச் செய்யலாம்.

(இதில் ஐந்தாண்டுகள் என்பதை, அரசினர் விருப்பத்திற்கும். விரைவுக்கும், வினைக்கடுமைக்கும் ஏற்பக் குறைக்கவும் செய்யலாம்.)

2.)அகநிலைச் சீராக்கங்கள்: (இரண்டாம் நிலை ஐந்தாண்டு)

கல்வி, தொழில்முறை ஏற்பாடுகளில் மக்களைக் கீழ்வரும் நான்கு நிலைப்பொருள், இனப்பகுப்புகளாகப் பகுத்து முன்னேறுவதற்குரிய சலுகைகளைத் தருதல்.

1. மிக முன்னேறியவர்கள் (மி.மு.ஏ.) : சாதியாலும், பொருளியலாலும் முன்னேறியவர்கள் இவர்களுக்கு வகைக்கு இரண்டிரண்டு கூடுதல் எண்கள் மேனி நான்கு எண்கள் (+2+2 =+4) தரப் பெறுதல் வேண்டும்.

2. முன்னேறியவர்கள் : (மு.ஏ.) : சாதி, பொருளியல் இவற்றுள் ஏதேனும் ஒன்றில் மேம்பட்டு நிற்பவர்கள். (இவர்களுக்கு இரண்டு கூடுதல் எண்கள் (+2) தரப்பெறுதல் வேண்டும்.

3. பின் தங்கியவர்கள் (பி.த) : சாதி, பொருளியல் இவற்றுள் ஏதேனும் ஒன்றில் பின்தங்கி நிற்பவர்கள். (இவர்களுக்கு இரண்டு குறைதல் எண்கள் (-2) தரப்பெறுதல் வேண்டும்.

4. மிகப் பின்தங்கியவர்கள் (மி.பி.த.) : (சாதியாலும், பொருளியலாலும்) - இவர்களுக்கு இரண்டிரண்டு குறைதல் எண்கள் தரப்பெறுதல் வேண்டும்.

இந்த எண்கள் அடிப்படையில் அவர்களுக்குத் திட்டமிடப்பெற்ற சலுகைகள் தரப்பெறுதல் வேண்டும்.

இவர்களின் தரத்துக்கு அடையாளமாகக் கல்வி, தொழில் வகைச் சான்றிதழ்களில் இந்நான்கு வகையான எண் குறியீடுகளே இடப்பெறுதல் வேண்டும். மற்றும், இவர்களுக்கான சாதிக் குறியீடுகள் முதற்பதிவை மிகக் கமுக்கமாக வைத்தல் வேண்டும். (தேவையானால் குறிப்பிட்ட கால எல்லைக்குப் பின்னர் அவற்றையும் அழித்து விடலாம்.)

(எ-டு)1. நலங்கிள்ளி (+4) 2. சேரலாதன் (+2) 3. நெடுஞ்செழியன் (4) 4. இளங்குட்டுவன் (-2)

3.) அகநிலைச் சீராக்கங்கள் : (மூன்றாம் நிலை - ஐந்தாண்டு)

இரண்டாம் ஐந்தாண்டுப் பதிவாளர்களை மறு ஆய்வு செய்தும், பிறரைப் புதுமுறையிலும் கீழ்க்காணும் வகையில் இருநிலை - பொருள், இன - மக்கள் பகுப்புகளாகப் பிரித்து, முன்போலவே எண் குறியிட்டு, முன்னேற்றத்துக்குரிய சலுகைகளைத் தருதல் வேண்டும்.

1. மிக முன்னேறியோர் (மி.மு.ஏ) : சாதி + பொருள் = +2
2. மிகப் பின்தங்கியோர் (மி.பி.த) : சாதி - பொருள் = -2

4.) அகநிலைச் சீராக்கங்கள் : (நான்காம் நிலை - பத்தாண்டு)

மூன்றாம் ஐந்தாண்டுப் பதிவாளர்களை மறு ஆய்வு செய்தும், பிறரைப் புதுமுறையிலும் கீழ்க்காணும் வகையில் இருவகைப் பொருள்வகை மக்கள் பகுப்புகளாகப் பிரித்து முன்போலவே எண்குறிகளடிப்படையில் முன்னேற்றத்துக்குரிய சலுகைகளைத் தருதல் வேண்டும்.

1. அரசுதவி தவிர்த்தோர் (அ.உ.த.) : பொருள்நிலை மட்டும் (+1)
2. அரசுதவி பெறுவோர் (அ.க.பெ.) : பொருள்நிலை மட்டும் (-1)

5.) 25 ஆண்டுகளுக்கு மேல் (நான்காம் நிலை) :

பொருள்நிலைச் சலுகைகளைத் தேவையானால் மேலும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத் தொடர்ந்து தரலாம். தேவையில்லையெனில் நீக்கிவிடலாம்.

ஆனால், மேற்குறித்த 25 ஆண்டுக் காலத்திற்குள் சாதியுணர்வுகளும் பெயர்களுமே ஒழிந்துபோய்விடும். மொழி தழுவிய தேசிய இனப் பெயர்களே (தமிழர், ஆந்திரர், கன்னடர், மலையாளர் முதலியனவே) நிற்கும். புதிய பொருள்நிலைக் குமுகாயந் தோன்றிவிடும்.

இத்திட்டம் பொதுமக்கள் கவனத்துக்கும், அரசுப் பார்வைக்கும் வந்து, மேற்கொண்டு விளக்கங்கள் கேட்கப் பெறும்பொழுது, விரிவாகவும், விளக்கமாகவும் நடைமுறை வடிவாக்கித் தரப்பெறும். இப்பொழுது இந்த அளவில் போதும் என்று கருதுகிறோம்.

எவ்வாற்றானும் சாதித் தொடர்பான அனைத்து நிலைகளும் நம் காட்டு விலங்காண்டித்தனத்தையே காட்டுவனவாகும் எனும் உணர்வு நம்மிடையே வேண்டுவதாகும்.

(தென்மொழி சு - 17 ; ஓ - 2 - ஆசிரியவுரை)

வரலாற்றில் தமிழ் ஈழம்

[ஆசிரியர்: உணர்ச்சிப் பாவலர் சிங்காரவேலன்; வெளியீடு: உணர்ச்சிக் கவிஞர் பதிப்பகம், 2, காவேரி சாலை, தேவதானம், திருச்சிராப்பள்ளி - 620002. விலை: உரு 40.00.]

தமிழீழம் பற்றிய இந்நூலில் நிலமண்டிலத் தோற்றம், குமரிக்கண்டம், இலங்கை தீவம், உயிரினங்களின் தோற்றம், மாந்தன் பிறப்பு முதலானவற்றைப் பற்றியும் தமிழீழத்தின் மக்களியல் ஆட்சியியல் பற்றியும், இற்றைப் போராட்ட நிலை பற்றியும், பிறவற்றைக் குறித்தும் எழுதப்பட்டுள்ளது.

வரலாற்றுச் செய்திகளைத் தக்க சான்றுகளுடன் முறையாக எழுதுவதைவிட, ஆசிரியரின் உணர்ச்சிநடையே மேலோங்கி நின்று நூலின் தரத்தைக் குறைக்கின்றது. ஆரிவர் (யாரிவர்) என்பதே ஆரியர் எனத் திரிந்து இனத்தின் பெயராயிற்று என்பதும், திரு இடம் - திராவிடம் என்பதும்(பக்.32), கதிர்+அகம் : கதிர்காமம் ஆயிற்று என்பதும்(பக்.38) இலவங்கம் அதிகம் விளைந்ததால் இலங்கைத் தீவு எனப்பட்டது என்றும், இலந்தைமரம் அதிகமாதலின் இலங்கையெனப் பெயர் பெற்றது என்றும், மூலிகையான இலவங்கப் பட்டை கிடைத்தால் இலங்கைத் தீவு என்றனர் என்றும் வேறுவேறு வகையாகப் பெயர்க்காரணம் கூறுவதும் (பக்.78), அரிமா தென்னாட்டில் அரிதாகக் காணப்படுவதால் அரிமா என்றனர் (பக்.109) என்பதும் இன்னபிறவும் பெரிதும் நகைப்புக்கிடமாக அமைந்துள்ளன.

முருகனுக்கு ஆறுபடை வீடு (பக்.38), கி.பி.2ஆம்நூற்றாண்டில் கரிகாலன் கல்லணை கட்டினான் (பக்.63), எனப் பரவலாகக் கூறப்படும் தவறான செய்திகள் இந்நூலில் இடம் பெற்றிருப்பதிலும், அந் நூற்றாண்டில் வாழ்ந்தோர் உரையாடலிலேயே 'இலெமூரியாக் கண்டம்' என்னும் பெயர் இடம்பெற்றிருப்பதிலும் வியப்பில்லை.நூல் முழுவதிலும், பஃறுளி என்னும் யாற்றின் பெயர் 'பக்றுளி' என்றே இடம் பெற்றுள்ளது. (எ-டு. பக்..18,20, 47. . .) ஆசிரியருக்கு ஆய்தம் தெரியவில்லையோ உடன்பாடில்லையோ? 'சைவம்' என்னுஞ் சொல் மட்டும் 'சய்வம்' என்றே நூலில் யாண்டும், (எ-டு: பக்.51,60,61,64) இடம் பெற்றிருப்பதற்கும் காரணம் உண்டு போலும்!'இஞ்சி இடுப்பு' (பக்.42) 'வில்லி' (பக்.41) திரைப்படத்தாக்கம் போலும்! கலவை நடையாலும் பிழைமலியவும் எழுதப்பட்டிருப்பினும், தமிழீழத்தவர்க்கு உதவும் வகையில் தமிழ் நாட்டரசர்கள் படையெடுப்புகள் பற்றியும் வெள்ளையராட்சியினின்றும் விடுபட்டபின்னர் இன்றுகாறும் சிங்களவர்கள் தமிழ்மக்களுக்கு இழைத்துவரும் கொடுமைகள் பற்றியும் தமிழர்தம் போராட்டங்கள் பற்றியும் செய்திகள் தொகுத்துக் கொடுக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது.

\- மறலி

நமக்கு வந்த மடல்கள்.

0 : 1626 அன்புடையீர்! வணக்கம்.

யான் ஒரு நீண்ட நாளைய தென்மொழி உறுப்பினன்; மொழி இன நலனில் பற்றுடையவன்; அவற்றின் மேம்பாட்டிற்கு உழைப்பதில் ஆர்வம் உடையவன். தென்மொழி முற்றாக மொழி, இன நலன் காப்பதற்கே உழைக்கும் இதழ் என்பது உலகறிந்த உண்மை. ஐயா அவர்களின் மறைவிற்குப் பின் அது நின்றுவிடுமோ என்று அஞ்சியவர்களில் நானும் ஒருவன். தொடர்ந்து இதழ் வருவதில் மிக்க மகிழ்ச்சி. தென்மொழியின் பொருளியல் முட்டுப்பாடு கருதி இவ்வஞ்சலுடன் உருவா ஐந்நூற்றுக்கான வரைவோலை அனுப்பியுள்ளேன். மொழி, இன மேம்பாட்டுக்கான தென்மொழிப் பணிகளில் ஊக்கத்துடன் செயலாற்றுவேன்.

-- **புலவர் அறிவுடைநம்பி,** சோமன்கோட்டை.

0 : 1627 அன்புள்ள ஆசிரியருக்கு,

தென்மொழியின் பாவலரேறு நினைவு மலர் அண்மையில் கிடைத்தது. படித்து மகிழ்ந்தேன். நான் இதுவரை ஐயாவைப் பற்றி அறியாத பல செய்திகளைத் தெரிந்துகொண்டேன். ஐயாவின் தமிழ்நாட்டு விடுதலைக் கொள்கை சில தலைவர்களிடையேயும் இயக்கங்களிடையேயும் பதிந்திருப்பது தமிழ்நாட்டின் வருங்காலத்தைக் குறித்து நம்பிக்கையுண்டாக்குகிறது. -- **செல்லையா,** அமெரிக்கா.

0 : 1628 ஆசிரியர் அவர்கட்கு அன்பான வணக்கங்கள். புலவர் திருக்குறள் நாவை சிவம் அவர்களின் அறிமுகத்தால் நான் தென்மொழி உறுப்பினரானேன். பாவலரேறு ஐயா அவர்களின் கொள்கைகளைப் பரப்புவதில் நான் முனைப்பாகச் செயற்பட்டு வருகிறேன். எதிர்ப்புகளுக்கு அஞ்சாமல் செயற்படவும், தங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு நல்கவும் என்றும் அணியமாக உள்ளேன்.

-- **மணவை கவிமரிதாசு,** நல்லபொன்னம்பட்டி.

0 : 1629 பேரன்புடையீர்! வணக்கம்.

தென்மொழி கடகம் இதழ் படித்தேன். தமிழில் வழிபடுவது அடிப்படையுரிமை. கைவிடப்பட்ட திருவள்ளுவர், வட்டாட்டமும் சீம்பும் முதலியன கருத்தாழம் மிக்கவை.

பெயருக்கு முன்பு சே.எம். அந்தோணி என்பதுபோல் ஆங்கில எழுத்துகள் தமிழில் எழுதப்பட்டுள்ளது (பக் 20) வருந்தத்தக்கது. முன்னெழுத்துகளும் தமிழில் எழுதப்பட வேண்டும். அவ்வாறு எழுதுமாறு தென்மொழி ஆவன செய்ய அன்புடன் வேண்டுகிறேன்.

- **புலவர் மு. சொரணம்,** திருவைகுண்டம்.

0 : 1630 ஆசிரியர் அவர்களுக்கு,

தென்மொழி கடந்த மாத (கடகம்) இதழ் படித்தேன். கருத்துகள் அனைத்தும் சிறப்பாக உள்ளன. யாவரும் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டியவை. ஆனால் இவை அனைத்தும் கடினமான தமிழ்நடையில் உள்ளன. தமிழ் வழிபாடு தொடரத் துணை நிற்பது மக்கள் கடமை என்றும் எழுதியுள்ளீர்கள். தமிழர்களில் எத்தனைப் பேர் இலக்கிய அறிவு பெற்றவர்களாக இருக்கிறார்கள்? 'அடக்கி யொடுக்கப்பட்ட நந் தமிழினம்' எனத் தொடங்கும் பாவலரேறு அவர்களின் பாடலிலிருந்தே தமிழர்களின் இன்றைய நிலை தெளிவாகத் தெரிகிறது.

நீங்கள் எழுதுவன தமிழ் இலக்கிய அறிவு பெற்ற சிறுபான்மை இலக்கியவாணர்களுக்கு மட்டுமா, தமிழ் எழுத்தறிவு பெற்ற தமிழ் மக்கள் அனைவருக்குமா?

தமிழ் மக்கள் அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டிய செய்திகளை எளிய தமிழில் எழுதினால் அதிக மக்களைச் சென்றடையும் வாய்ப்பு உள்ளது. இலக்கியத் தமிழறிவு பெற்ற அறிவாளிகளெல்லாம் தமிழ்ப் பொதுமக்களிடமிருந்து விலகி நெடுந்தொலைவில் நின்றுகொண்டு, தமிழின ஆதரவு கிடைக்கவில்லை என்றால் அது எந்தவகையில் ஞாயம்? - ***(படிப்பாளி ஒருவர்),*** தாம்பரம்.

*(**ஆசிரியர் குறிப்பு** : மக்கள் பல்வேறு படிநிலைகளில் இருத்தலால் எழுதப்பட்ட ஒன்றனை விளங்கிக் கொள்வது என்பது அவரவர் கல்வித்தரம், மொழியறிவு, ஈடுபாடு, தொடர்ந்த பயிற்சி, முயற்சி ஆகியவற்றைப் பொறுத்தது. எழுதுவோர் ஒரு பொது வரம்பீட்டையே கொள்ள முடியும். பிறமொழி கலவாமை இலக்கியத் தமிழாகவும், கடினநடையாகவும் படுகிறது போலும். 'குழுகாயமும் தனித்தமிழ் பேணலும் தனித்தனியானவை அல்ல'. நேயர்கள் தங்கள் நிலையைச் சற்று உயர்த்திக்கொள்ள முயல்வது நன்று.)*

0 : 1631 தென்மொழி ஆசிரியர் குழுவிற்கு வணக்கம்!

"பாவலரேறு நிலத்தில் முளைவிட்ட பயிர்களே நாங்கள்" என நான் தென்மொழியின் பாவலரேறு இரண்டாமாண்டு நினைவு

மலருக்கு எழுதிய் கட்டுரை குறித்துத் தி.பி. 2028 கடகம் தென்மொழி இதழில் இரு மடல்கள் எழுதியுள்ள அன்பர்கள் எவ்வகை அடிப்படையுமின்றிப் 'பாவலரேறு அவ்வாறு கூற மாட்டார்' என்று கூறுவது அறிவுப் பொருத்தமற்றது.

பொதுச் செயலாளர் கார்முகில் அவர்களது மணவிழாவில் பாவலரேறு ஐயா ஆற்றிய உரை ஒலிநாடாவில் பதியப்பெற்றுள்ளது. ஐயா அவர்கள் தமிழ்நிலத்தில் (இதழ் எண் : 172. தி.பி. 2025 மடங்கல்) "தன்னாட்சி பெற்ற தமிழகம் இப்படித்தான் இருக்க வேண்டும்; த.நா.மா.இலெ. கட்சியின் திட்டம் சரியானது" என்ற தலைப்பில் வெளியிட்ட சான்றுரையின் பொருளென்ன? ஒரு கட்சியின் திட்டத்தை ஒருவர் சரி என்று வெளியிட்டால், அது அந்தக் கட்சியின்பால் அவர் கொண்டுள்ள உறவை வெளிப்படுத்தவில்லையா?

கோவை மாநாடு முடிந்து, கோவைப் பேருந்து நிலையத்திலுள்ள மாநகராட்சி விடுதியில் நான் விடைபெறும்போது ஐயா அவர்கள் கூறியதை அங்கிருந்த திருவாளர்கள் பறம்பை அறிவன் அவர்களும், தாராபுரம் சிங்கராயர் அவர்களும் அறிவர். எனக்கோ, எனது கட்சிக்கோ அரசியல் நாகரிகத்திற்குப் புறம்பாக முன்னிறுத்திக்கொள்ளும் பண்பாடு கிடையாது. அதே வேளையில் வரலாற்று உண்மைகள் மறைக்கப்படும்போது அதை நிறுவ வேண்டிய கடமையும் பொறுப்பும் உள்ளன. காழ்ப்புணர்ச்சி கொண்டு அணுகுவது உண்மைகளை அறிந்துகொள்ள எவ்வகையிலும் பயன்படாது. **- கி.வே. பொன்னையன்**, சென்னிமலை.

0 : 1632 தென்மொழி ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்!

தென்மொழி (சுவடி : 29, ஓலை : 7) இதழ் கண்டேன். 'நமக்கு வந்த பாடல்கள்' பகுதியில் திரு.கி.வே.பொன்னையன் பற்றி வெளியிடப் பட்டுள்ள செய்தியை முழுமையாக மறுக்கிறேன். ஐயா அவர்களோடு இறுதிக் காலத்தில் நெருங்கிப் பழகியவன் என்ற முறையில் சில செய்திகளைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

நடந்து முடிந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது தஞ்சையில் தளைப்படுத்தப்பட்டுத் திருச்சி நடுவண் சிறையில் ஐயா அவர்களோடு நான் ஒன்றாக இருந்தவன் என்ற முறையில் இச்செய்தியை வெளியிடுகிறேன். ஐயா அவர்கள் இறுதி மூச்சுவரை எந்தத் தமிழ்நாட்டு விடுதலைக்காக உழைத்தாரோ அந்த எண்ணத்தைத் த.நா.மா.இலெ. கட்சிதான் நிறைவேற்றும் என முழுநம்பிக்கை கொண்டிருந்தார்.

ஐயா அவர்களின் தமிழ்நிலத்தில் (இதழ் எண் : 172) முதல் தலைப்புச் செய்தியிலேயே த.நா.மா.இலெ. கட்சியின் திட்ட அறிவிப்பை வரவேற்று எழுதியிருப்பது சான்றாகும்.

கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் கார்முகில் அவர்கள் ஐயாவின் தொடக்கக் காலத் தென்மொழி அன்பர்; மாணவர். அதுமட்டுமன்று, அவரது திருமணத்தை ஐயா அவர்கள் தலைமை ஏற்று நடத்திவைத்தார். அப்போது ஐயா அவர்கள் ஆற்றிய உரையின் ஒலிநாடா சான்றாக உள்ளது.

ஐயா அவர்களுக்குப் பெருமை சேர்ப்பது என்பது, அவர் எதற்காக இறுதி மூச்சுவரை வாழ்ந்தாரோ, அந்தத் தமிழ்நாட்டு விடுதலையை முன்னெடுப்பதே ஆகும். அந்த அடிப்படையில் த.நா.மா.இலெ. கட்சியின் தோழர் கி.வே. பொன்னையன் கட்டுரை. ஐயா அவர்களை முழுமையாக உள்வாங்கிக்கொள்ளாமல் எழுதுவதுதான் ஐயாவுக்குச் சிறுமை சேர்ப்பதாகும். - **ச.பொன். கிட்டு**, கரூர்.

0 : 1633 ஐயா, வணக்கங்கள்!

பாவலரேறு ஐயா அவர்கள் திரு. கி.வே. பொன்னையன் அவர்களிடம் கூறியது (தென்மொழி சுவடி 29; ஓலை 6-மலர்க்கட்டுரை) நட்பு முறையிலும் நன்றிக் கடப்பாடாகவும் விடுதலை உணர்வில் இரு இயக்கங்களும் ஒன்றானவை என்பதாலும், ஒற்றுமை உணர்வுடன் செயற்பட்டு இறுதிவரை ஒரு குறிப்பிட்ட கொள்கைக்காகப் போராட வேண்டும் என்று கூறியதாகும்.

ஐயா ஒடுக்குமுறை (தடா)ச் சிறையிலிருந்தபோது அவரை விடுதலை செய்யக் கோரித் த.நா.மா.இலெ. தமிழகம் முழுவதும் நடத்திய கூட்டங்கள், மாநாடுகள் பற்றித் திரு. பொன்னையனிடம் பேசிக்கொண்டிருக்கும்போது ஐயா கூறினார். நானும் உடனிருந்தேன். அவரிடம் 'நீங்கள்' என்று ஐயா கூறியது தனிப்பட்ட திரு. பொன்னையன் அவர்களை மட்டும் குறிக்காது. அவர் சார்ந்திருக்கும் த.நா.மா.இலெ. கட்சியைக் குறிக்கும் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். - **புலவர் தி.மு. அரசமாணிக்கம்**, ஈரோடை.

ஆசிரியர் குறிப்பு:

திரு. கி.வே. பொன்னையன் அவர்கள், தென்மொழி (பாவலரேறு இரண்டாவதாண்டு நினைவு மலர்)க் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளபடி, பாவலரேறு ஐயா அவர்கள் பேசியிருக்கக்கூடும்.

ஐயா அவர்கள் தி.மு.கழகத் தலைவர் கலைஞர் அவர்களைப் பல

நேரங்களில் பாராட்டியிருக்கிறார்கள். தென்மொழியின் ஓர் இதழ் முழுவதுமே கலைஞர் அவர்களின் தமிழ் இன நலச் செயற்பாடுகளைப் பாராட்டியதும் உண்டு. அவ்வாறே தி.க. பொதுச் செயலாளர் திரு. கி. வீரமணி, பா.ம.க. நிறுவனர் மருத்துவர் இராமதாசு, தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு. ப. நெடுமாறன், த.தே.பொ.க. பொதுச் செயலாளர் திரு. பெ. மணியரசன், தனித் தமிழர் கழகத் தலைவர் திரு. நகைமுகன் ஆகியோர்தம் இனநல மேம்பாட்டுச் செயற்பாடுகள் ஐயா அவர்களால் பாராட்டப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசத் தன்னுரிமை மாநாட்டு அறிக்கை, தமிழக உழவர் கழக அறிக்கை, இளைஞர் பேரவை அறிக்கைகள் முதலியன தமிழ் நிலத்தில் வெளியிடப்பட்டுள்ளன. பெண்ணாடம் முற்போக்கு இளைஞரணி மாநாட்டை வரவேற்று 'விடுதலைப் பாசறை கட்டமைக்கப்படுகிறது' என்று தமிழ் நிலத்தில் *(4.3.84-இதழ் எண் 34)* ஆசிரியவுரை எழுதப்பட்டுள்ளது. தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணியைத் தமிழ் நிலம் *(9.12.84-இதழ் எண் : 49)* வரவேற்றுள்ளது. முற்போக்கு இளைஞரணி, ஒடுக்கப்பட்டோர் உரிமை மீட்புக் கூட்டமைப்பு ஆகியவை ஐயா அவர்களின் பாராட்டைப் பெற்றுள்ளன. அவ்வகையில் "த.நா.மா.இ.லெ.க. தேசிய விடுதலைப் புரட்சியின் பணிகளாக வகுத்தளிக்கும் திட்ட அறிவிப்பை நாம் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம்" என்றும் எழுதியுள்ளார்கள்.

பாவலரேறு ஐயா அவர்கள் "உமி மலையில் ஓர் அரிசி கண்டாலும் அதை எடுத்து உவந்து போற்றும்" மனப்பான்மையுடையவர்கள். தீம்பு செய்கிறபோது கண்ணறக் கண்டிப்பது போலவே, நன்மை செய்கிறபோது மனம் விட்டுப் பாராட்டுவது அவர்கள் இயல்பு. தமிழ்மொழி, இனம், நாடு ஆகியவற்றின் மேம்பாட்டுக்காக யார் எவ்வகை நன்முயற்சிகள் மேற்கொண்டாலும், அவ்வினைப்பாட்டில் அவர்கள் ஆழ்ந்த ஈடுபாடும் மன எழுச்சியும் கொள்ளுமாறு, "நீங்கள்தாம் இதற்குத் தக்கவர்; உங்களால்தான் இதனைச் செம்மையாகச் செய்ய முடியும்; நீங்கள் இதனைக் கட்டாயம் செய்தல் வேண்டும்'' என்றவாறு அவர்களை ஊக்குவது வழக்கம். அவ்வகையிலேயே திரு. கி.வே. பொன்னையன் அவர்களொடு உரையாடும்போது ஐயா அவர்கள் பேசியிருக்கலாம். த.நா.மா.இ.லெ. கட்சியினரையோ, திரு. கார்முகில் அவர்களையோ மட்டுமே ஐயா அவர்கள் உவந்து போற்றிப் பேசியதாக எடுத்துக்கொள்வது ஏற்புடையதாகாது என்று கருதுகிறோம்.

-இறை.

தமிழ்க்களம் நோக்கி...



காட்டை, கடிய மேட்டைத் திருத்திக்
கூடாய், கூட்டில் குடியாய் மலர்த்தி
நாடாய், தமிழ அரசை நிறுத்திப்
பாடாற் றியநெடு மரபின் தொடர்ச்சியே
பாவல ரேறே ஐயா உம்மின
மக்களின் வாழ்வு மரபின் வலிவு
இக்கால் அடிமை இழிநிலை போக்கக்
கொதித்த கொதிப்பும் கொட்டிய எழுத்தும்
செவிட்டு மக்களின் செவிநுனி அதிர்ப்புறக்
குருட்டு விழிகளைக் கூறிக் கிழிக்க
உரஞ்சேர் உணர்வை உளத்தில் விதைக்க
வினைக்களம் அமைத்து விழுதாய் ஊன்ற
முனைப்புளம் கொண்ட முளையராய்த்
'தமிழ்க்களம்' - அமைப்போம் தக்கன செய்விரே!

கடந்த *14.7.96*-க்குப் பிறகு *2.11.96* வரை நன்றியுடன் பெறப்பட்ட தமிழ்க்கள அமைப்புக்கான தொகைகள் ;

பட்டியல் எண் : *3*

1. சென்னை, சிற்றரசு அவர்கள் வழி : *150.00*
2. நெமலி, மா.செ. தமிழ்மணி அவர்கள் வழி (இரண்டாம் முறையாக) : *500.00*
3. சென்னை, சரோசா அம்மையார் அவர்கள் வழி (இரண்டாம் முறையாக) : *500.00*
4. திருவெறும்பூர், அர செழியன் அவர்கள் வழி : *150.00*
5. சென்னை, வழக்கறிஞர் சோதிப்பிரகாசம் அவர்கள் வழி : *575.00*
6. வெங்காலூர், மருது அவர்கள் வழி *1200.00*
7. தென்மொழி அச்சகத்துக்குநேரடியாகவும்,பணவிடை வழியாகவும், காசோலை வழியாகவும் பெறப்பெற்ற தொகை -மூன்றாம் முறையாக வரவு : *7523.00*
   - கா.செ. சாகுல் அமீது, திண்டுக்கல் - *1000.00*
   - புலவர் சிவசங்கு, சென்னை-82. - *100.00*
   - தேவராசு, சென்னை *1000.00*
   - அ. வியரைசு, நெல்லை. - *100.00*

தமிழ்ச்சேரன், வேலூர் *200.00*

கமழும் பாட்டு

-பாவை. நடவரசன்

தென்மொழி பாவலரேறு இரண்டாமாண்டு நினைவு மலரின் பக்கங்களைத் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஐந்து, ஆறு பக்கங்களைத் திருப்பியிருப்பேன். அப்போது "என் மனைவி தாமரையாள்" என்னும் தலைப்பு கண்ணில் பட்டதும் பக்கத்தைத் திருப்பாமல் கவனத்தைத் திருப்பித் தலைப்பை மீண்டும் ஒருமுறை படித்தேன். தேடிய செல்வம் கிடைத்ததைப்போல் மகிழ்ந்தேன்.

இந்தப் பாடலைத்தான் இரண்டு ஆண்டுகளாகத் தேடிக்கொண்டிருந்தேன். தென்மொழி அலுவலகத்திற்கே எழுதி வாங்கிடவும் எண்ணியிருந்தேன். அதுவே கிடைத்ததால் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தேன். காரணம், இந்தப் பாட்டில்தான் அம்மாவைப் பற்றிய ஐயாவின் உள்ளம் இருக்கிறது; உண்மை இருக்கிறது.

ஐயா அவர்கள் ஈரோட்டில் நடந்த மனுநூல் எரிப்புப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கினார்கள். காவலர்கள் தளைப்படுத்திக் கோவைக்குக் கொண்டுபோனார்கள். கோவைச் சிறையில் 28.5.81 ஆம் நாள் காலையில் இந்தப் பாடலை எழுதினார்கள்.

இந்தப் பாடல் எழுதுவதற்கு முதல் நாள் அதாவது 27.5.81 ஆம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

சு. வடிவேல், சென்னை -	1000.00	
தி. இரவீந்திரன், ஓசூர் -	1000.00	
முனைவர் திருக்குறள் இராமக்கிருட்டிணன், சென்னை.	1000.00	
அ. தெள்ளியன், புதுச்சேரி -	100.00	
இர. சந்திரசேகரன், தூத்துக்குடி	200.00	
தேன்மொழியருளி, புதுச்சேரி -	150.00	
கோ. இரவிச்சந்திரன், சென்னை	-25.00	
கொ. பரமசிவம், சேலம் -	1000.00	
குமணன், பொன்னேரி -	100.00	
புலவர் நாவை சிவம், மணப்பாறை	500.00	
கோ. இரவிச்சந்திரன், சென்னை-24.	-48.00	
8. மும்பாய், கி. பெருமாள் அவர்கள் வழி -		1763.00
9. உ.செல்லூர், சீத்தலைச் சாத்தனார் அவர்கள் வழி-		1000.00
10. பற்றுமுறி 176 -		452.00
பட்டியல் எண் 2 வரை வரவு		70294.00
2.11.96 வரை வரவு		84107.00

நாள் ஐயாவுக்கு உடல் நலம் இல்லை. உடலில் வெப்பம் குறைந்து கொண்டிருப்பதாகக் கூறினார்கள். அன்று எண்ணெய் தேய்த்துக் குளிப்பதாக இருந்ததையும் தவிர்த்தார். ஆழ்ந்த நினைவோடு வெகுநேரம் அமைதியாக அமர்ந்திருந்தார். இரவு கடுங்காற்றோடு தூறல் தொடங்கியது. அதன் சாரல், முற்றத்தின் கம்பிகளைக் கடந்து உள்ளே வீசியது. சற்று நேரத்திற்கெல்லாம் காற்று நின்றது. கனத்த மழை கொட்டியது.

இரவு மழை பொழிந்ததால் மறுநாள் காலை மண் குளிர்ந்தது! மனமும் குளிர்ந்தது! அந்தக் காலை நேரத்தில்தான் (28.5.81) ஐயா அவர்கள் பாடல் எழுதிக்கொண்டிருந்தார்கள். பின்னர்க் காலை உணவிற்குப் பிறகு என நினைக்கின்றேன்-அந்தப் பாடலை இறை அவர்களிடம் கொடுத்துப் பாடும்படி சொன்னார்கள்.

திரு. கு.வெ.கி. ஆசான், கோவை மாவட்டத் தி.க. தலைவர் அழகு மதியனார் (இராமச்சந்திரன்), தி.க. தோழர்கள் எல்லாரும் சுற்றி அமர்ந்திருக்க, இறை அவர்கள் பாடலைப் பாடினார்கள். பாடலின் கருத்துக்கேற்பக் குரலினை உயர்த்தியும், தாழ்த்தியும் பாடிய பாங்கு நெஞ்சினை நெகிழ வைத்தது.

பாடல் எடுப்பின் முதல் இரண்டு வரிகளை

"இனிது அவளது நினைவு-எனக்
கெத்துணை நீண்ட தொலைவில் இருப்பினும்"

எனப்பாடியதுமே, எனக்கு முதல்நாள் நெடுநேரம் அமைதியாக அமர்ந்திருந்த ஐயாவின் தோற்றம் நினைவுக்கு வந்தது. நேற்று அவர், பழைய நினைவுகளை எண்ணி, எண்ணி அசைபோட்டுக் கொண்டிருந்திருக்கிறார் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டேன். அந்தப் பழைய நினைவுகள் :- அம்மா ஐயாவோடு -- ஐயாவுக்கே தம்மை ஒப்படைத்துக் கொண்டது, வாழ்வின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்துக் கொண்டிருப்பது, இன்றைக்கும் சென்னையில் தன்னந்தனியாகத் தம் மக்களையும், அச்சகத்தையும் பார்த்துக்கொண்டிருப்பது....போன்ற செயல்கள் ஐயாவின் நினைவுக்குள் எழுந்து, நெஞ்சினையே உருகச் செய்துவிட்டன.

குறிப்பாகச் சொல்லப்போனால், ஐயாவும் அம்மாவும் செய்துகொண்ட திருமணம், செம்புலப் பெயல்நீர் போல அன்புடன் கலந்த காதல் திருமணம். அந்தத் திருமணத்தின் வாழ்க்கையைத் தொடக்கமுதல், இன்றுவரை எண்ணிப் பார்த்திருக்கிறார். அந்த எண்ணத்தின் வெளிப்பாடே இந்தப் பாடல் என எண்ணுகிறேன். "இனிது அவளது நினைவு" என எடுத்த எடுப்பிலேயே பாடியிருப்பது,

அம்மாவின் தொண்டினையும், தூய வாழ்வினையும் நமக்கு நினைவுப்படுத்துகின்றது.

"சிறு அழைப்பும் தவிராத ஒட்டநடைக் காரி!" என்னும் வரியைப் பாடும்போது, கடலூரின் காட்சி கண்முன் நிற்கிறது. ஆம், ஐயா அவர்கள் முன்னால், அலுவலக அறையில் இருப்பார்கள். அம்மா அவர்கள் பின்னால் சமையற்கட்டில் சமையல் வேலைகளைப் பார்த்துக்கொண்டிருப்பார்கள். ஐயா அவர்கள் எதற்காவது அம்மாவைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவார்கள். "இதோ வந்திட்டேனுங்க!" என்னும் பணிவான குரல் முதலில் கேட்கும். அடுத்த நொடியில் சமையல் கட்டில் அது என்ன வேலையாக இருந்தாலும் சரி பாலே அடுப்பில் காயவைத்துக்கொண்டிருந்தாலும் சரி, அதை அப்படியே விட்டுவிட்டு விரைந்து வந்து, "என்னங்க?" எனக் கேட்பார்கள். இதுபோன்ற நிகழ்ச்சி ஒன்று அன்று; பல உள்ளன. அதனால் இந்தப் பாடலிலுள்ள வரிகள் எல்லாம் கற்பனை அல்ல; வாழ்வில் நடந்த உண்மை நிகழ்ச்சிகள்.

"இனியுயிர்க்கும் பிறவியிலே அவட்கடிமை செய்வேன்
என்றனைநற் பெண்டாக்கித் தலைமையவட் குய்வேன்!"

என்னும் வரிகள் என்னை வியக்க வைத்தன. கழக இலக்கியத்தில் தலைவனும் தலைவியும் அடுத்த பிறவியிலும் ஒருவரை ஒருவர் பிரியாமல் இணையாக இருந்திட விரும்பும் காட்சி உண்டு. ஆனால் ஐயா அவர்கள் அடுத்த பிறவியில் பெண்ணாகப் பிறந்து, அம்மாவுக்குத் தலைமைப் பொறுப்பைத் தந்து தொண்டு செய்வேன் என்கிறார்; கழக இலக்கியக் கருத்துக்கு ஒருபடி மேற்சென்று, பெண்மைக்குச் சிறப்புச் செய்திருக்கிறார். கொஞ்சம் ஊன்றிப் பார்த்தால் ஐயைப் பாவியத்தை அம்மாவுக்குப் படையல் வைத்தாரே.. அந்தப் படையல் பாட்டிற்கு ஒரு விளக்கவுரையாகப் பாடல் வடிவில் வடித்துக் கொடுத்திருப்பதுதான் "என் மனைவி தாமரையாள்" என்னும் பாட்டாகும் என்பது புலப்படும். இது அம்மாவைப் பற்றிய படப்பிடிப்பு; காலம் காலமாகக் கழக இலக்கியம்போல் கமழும் பாட்டு. ○

தென்மொழி

ஆண்டுக் கட்டணம் (மலர் உட்பட)	உரு. 60.00
வாழ்நாள் கட்டணம்	உரு. 600.00
தனி இதழ்	உரு. 4.00

வெளிநாட்டுக் கட்டணம்:

1. வானூர்தி வழி ஆண்டுக் கட்டணம்	உரு. 350.00
2. கப்பல் வழி ஆண்டுக் கட்டணம்	உரு. 250.00

தென் மாவட்டங்களில் சாதிவெறியாட்டம்
தமிழீழத்தில் மக்கள் படுகொலை

நாம் செய்ய வேண்டுவது என்ன?

- தென்மொழி அவையக் கருத்தரங்கம்

இடம்: சென்னை - திருவொற்றியூர் நாள்: தி.பி.2028 கன்னி 4 காரி (20.9.97)

தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில், மக்கள் அன்றாடம் சாதிவெறியாட்டங்களைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை நிலவுகிறது. சாதியை ஒழிக்க முயன்றவர்களும் சாதியுணர்வுக்கு ஆட்படாதவர்களும் அப்பாற்பட்டவர்களுமான சிலர்தம் பெயர்களையுங்கூடச் சாதியடையாளங்களாகச் சார்த்தி அவமானப்படுத்திப் புறக்கணிக்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

சாதியமைப்பை அடியோடு களைய வேண்டும் என்று பெரும்பாலோர் கருதுவதில்லை. சாதிநிலை நீடிப்பதற்கும் பெருகி வளர்வதற்கும் எல்லா வகையான வழிவகைகளும் இருக்கவும், வாய்ப்புகள் உருவாகவும் விட்டுவிட்டுச் சாதியின் தீயவிளைவுகளைக் கண்டு முணகுவதாலோ, முகஞ்சுளிப்பதாலோ என்ன பயன்?

சாதிச் சிக்கலுக்கான அடிப்படைக் கரணியத்தை ஆராய்ந்து தீர்வு காண வேண்டும். அச்சுறுத்தலாலோ, அடக்குமுறையாலோ, மேலோட்டமாக வாயளக்கும் அறிவுரைகளாலோ அமைதியை ஏற்படுத்திவிட முடியாது. அடக்கி வைக்கப்படும் நிலை அமைதியுமாகாது. சாதிச் சிக்கலை நீக்கவும் இயலாது.

தமிழீழத்தில் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக அடிப்படை உரிமைகளுக்காகப் போராடிவரும் மக்கள் இன்று அழிவின் உச்சக் கட்டத்தில் இருக்கின்றனர்.

போராளிகளை எதிர்கொள்ள முடியாத சிங்களப் படையினர் பொதுமக்களைக் கண்மூடித்தனமாகத் தாக்குகின்றனர். மக்கள் குடியிருப்புகளை நோக்கி ஏவுகணைகள் பாய்கின்றன. மருத்துவமனைகளும் கல்வி நிலையங்களும் குறிவைத்துத் தாக்கப்படுகின்றன.

தமிழக மீனவர்கள் பிழைப்புக்காகத் தென்கடலில் செல்ல முடியவில்லை. இந்திய அரசின் கண்ணசைவு இன்றிச் சிங்களப்படை

இந்திய எல்லையில் திருமரைக்காட்டுப் (வேதாரண்யம்) பகுதியில் வந்து குண்டுவீசிச் சிலரைக் கொன்றுவிட்டுச் சென்றிருக்க முடியுமா?

கடந்த காலத்தில் ஈழத் தமிழர் இன்னல் துடைக்கத் தங்கள் அமைப்புகளை முன்னிறுத்தியவர்கள், புத்தியக்கங் கண்டவர்களெல்லாம் எங்கே? ஆர்ப்பாட்டம், பேரணி, அறப்போர் நடத்தியவர்களெல்லாம் வாயடங்கிக் கிடப்பதேன்?

இந்நிலைகளையும் பிறவற்றையும் விரிவாக ஆராய்ந்து, நாம் செய்ய வேண்டுவது என்ன என்பதற்கான வழிவகை காணும் பொருட்டுத் தென்மொழி அவையத்தின் சார்பில் கருத்தரங்கம் ஒன்று நடத்த ஆவன செய்துள்ளோம். தி.பி. 2028 கன்னி 4 காரிக்கிழமை (20.9.97) அன்று சென்னை - திருவொற்றியூரில் நடைபெறும் இக் கருத்தரங்கில் குமுகாய நல, இன நல விழைவுடைய அறிஞர்கள் பலர் பங்கேற்க உள்ளனர்.

திருவாளர்கள் பழ. நெடுமாறன், பெ. மணியரசன், கோவை இராமகிருட்டிணன், சுப. வீரபாண்டியன், இரா. பாவாணன், அரு.கோபாலன், கி.வே. பொன்னையன், விடுதலை இராசேந்திரன், பேரா. சச்சிதானந்தம் முதலானோரும், திருவாளர்கள் ஆனைமுத்து, திருமாவளவன், அருள்மொழி, தியாகு, எழில்மலை, குமரிமைந்தன், உஞ்சைராசன் முதலானோரும் அழைக்கப் பெற்றுள்ளனர்.

கருத்தரங்கம் சிறப்புற நடைபெற அன்பர்கள் அனைவரும் ஒத்துழைக்குமாறும், வருகைதந்து கலந்துகொண்டு சிறப்பிக்குமாறும் வேண்டுகிறோம்.

இன்னணம்

தென்மொழி அவையக் கருத்தரங்கச் செயற்குழுவினர்:

திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார்(அமைப்பாளர்)

மா. அதியமான், தாழையூற்று; **புலவர் வடிவேலனார்**, ஈரோடை; **விழுப்பரையன்**, விழுப்புரம்; **க. கண்ணன்**, கரடிப்பட்டி; **சி. அறிவுடைநம்பி**, திருவொற்றியூர்; **நற்றேவன்**, அரக்கோணம்; **அழகுஒளி**, சென்னை

தொடர்பு முகவரி:
தென்மொழி அவையம், 5 அருணாசலம் தெரு, சென்னை - 5.

வீரத் தமிழ்மகன் பாவலரேறு

-முனைவர் கா.பொ. இரத்தினம்

ஆன்ற புலமையும், ஆழ்ந்தகன்ற கல்வியும், ஆற்றல் மிக்க சொல்வன்மையும், அழுத்தம் மிக்க எழுத்துவன்மையும், அஞ்சா நெஞ்சும், அளவிலாத உறுதியும், அசையாத துணிவும், அயரா முயற்சியும் உடையவர் பாவலரேறு. செந்தமிழ் நாடும் தமிழ்ஈழமும் உருவாக வேண்டுமெனும் குறிக்கோளுடன் அல்லும் பகலும் அஞ்சாமலும் அசையாமலும் அயராமலும் உழைத்தவர் அவர்.

தமிழின் முதன்மைக்காகவும், தமிழகத்துக்காகவும், தமிழ் ஈழத்துக்காகவும் அவரைப் போல அல்லற்பட்டு, அடிபட்டுச் சிறைப்பட்டுப் போராடிய வீரத் தமிழ்மகன் வேறொருவருமில்லை எனலாம்.

யாழ்ப்பாணம் - புங்குடு தீவில் நடைபெற்ற எமது உலகத் தமிழ்மறைக் கழகத்தின் பதினெட்டாவது திருக்குறள் மாநாட்டில் எனது அழைப்பை ஏற்றுப் பங்குகொண்டு சொற்பொழிவாற்றி மக்கள் உள்ளங்களுக்கு உரமேற்றியவர் அவர். அப்பொழுது அவர் என்னுடன் சில நாள்களைக் கழித்தார். அவருடன் நெருங்கிப் பழகி அவருடைய புலமையையும், பேராற்றலையும், நோக்கங்களையும் அறியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

1.7.95இல் சென்னையிலுள்ள செருமன் அரங்கத்தில் அவருடைய நினைவு நிகழ்ச்சி நடைபெற்றது. அப்பொழுது கலைஞர் மு. கருணாநிதி, பேராசியர் தீரன், முதலானோருடன் தனித்தமிழ்ப் புரட்சி - மறுமலர்ச்சி - இனவிடுதலைக் கழகங்கள் பலவற்றின் பேராளர்களும் உரையாற்றினர். நான் நிகழ்த்திய உரையின் ஒரு பகுதியை ஈண்டுக்காண்க:

". . . . பாவலரேறு பெருஞ்சித்திரனார் அரசியற் சாய்காலோ செல்வச்சாய்காலோ உடையவரல்லர். அவருடைய செந்தமிழ்ப்புலமைச் சாய்கால், பேரறிவுச் செல்வம், துணிவும் உறுதியும் மிக்க புரட்சிப் போக்கு, நாடு, மொழி, இனம் என்பவற்றின் முன்னேற்றத்தில் தம்மை முற்றாக ஈடுபடுத்தியமை, உலகத் தமிழருக்காக உழைத்தமை என்பனவே அவரைத் தமிழினத்தின் பெருந் தலைவராக - மாசு மறுவற்ற தலைவராகப் பொலியச் செய்தன. அவர் உலகமெங்கும் வாழுந் தமிழர்களின் மதிப்புக்கும் பாராட்டுக்கும் உரியவரானார்.

தமிழகத்திலே எனக்குப் பழக்கமான - கேண்மைமிக்க தமிழறிஞர்கள் பலருளர். இவர்களுள்ளே எனக்கு மிகு நெருக்கமானவர்---- அண்ணியமானவர் பாவலரேறு அவர்களேயாவார். இதற்குக் காரணம் தமிழ் மொழி, தமிழ்நெறி பற்றிய என்னுடைய கொள்கையும் அவருடைய கொள்கையும் ஒன்றுபட்டமையே யாகும். இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினராக நான் பணி யாற்றிய காலத்தில் தமிழ் ஈழத்தை உருவாக்கவும், இழந்த உரிமைகளைத் தமிழர் பெறவும், தமிழுக்கு எல்லாத் துறையிலும் முதன்மை கொடுக்கவும், உலகத் தமிழரை ஒன்றுபடுத்தவும் உழைத்தேன். இவற்றுக்கெல்லாம் ஆதரவு நல்கியவர் அவர்.

இருப்பு: 'நினைவுத் திரைகள்'

என்றுதான் விடியுமோ? - களிறு

சாதிப் புழுக்கள் நெளிந்திடும் மொத்தைச்
சாணித் திரளைகள் நாமென உரைத்தே
ஊதிப் பெருக்கிய வெறியர் கிறுக்கரின்
சூதினை விளக்கிச் சுடரென நின்று
தீதிது சுட்டலில் சாதியின் பெயரெனத்
தமிழரே சரியென் றுரைக்க வேண்டி
மோதிட எழுந்த முழுமை அரிமா
மொய்ம்புத் தமிழன் மொழிபு இன்றோ
காதிடை ஏறிடாக் கடினச் சொல்லெனக்
கலங்கல் தமிழர் எண்ணியே இழிந்தனர்

இந்து மதமெனும் இழிமதம் ஒழிய
வெந்தண லுளத்தில் நெடிய எழுதி
முந்து தமிழர் பெருமை விளக்கி
மொழிந்த பாவலர் ஏறு நம்மிடைத்
தந்த விளக்கத் தகுதியை அறியா
மந்தை இனமாய் மாண்டு வீழச்
சொந்த அறிவு வாழ்க்கைப் பண்பை
வந்த புழுதியுள் புதைத்தே இழந்தாய்
எந்தமி ழத்தை ஏற்க மறுக்கும்
எடுப்பார் பிறவியாய் நீயோ தமிழா!

தமிழே எனக்கிங் கிறைவன் மூச்செனத்
தமிழின் தகையோன் பேச்சினை ஏற்றுத்
தமிழின் வாழ்வை அறிவைப் பயின்று
அதனின் கல்விச் சிறப்பைப் பயிற்றி
அமிழ்தாம் தமிழைப் பேணிக் காக்க
விழித்தோம் நாமோ இல்லை தமிழா!
குமிழதாம் வாழ்வுள் குழுமொழித் தமிழெனக்
குடிலுக் குள்ளே முடக்கி விட்டோம்
உமிழ்நிலை ஆங்கில சமற்கிருத இந்தியாவில்
அமிழ்நிலை யாவதோ அன்னை அருந்தமிழ்!

'விடுதலை வேண்டும் அதுமுதல் வேலை'
விழியடா தமிழா வினையினை நோக்கி
'கொடுதலை என்றால் கொடுத்திடத் துடிக்கும்
விடுதலை மாப்படை' வேண்டுமாய் ஊக்கிக்
கெடுநிலைத் தமிழரைக் கூவியே அழைத்த
கடும்புயல் பாவலர் ஏறுவின் முழக்கினை
மடுத்திடல் இல்லாச் செவிப்பறை கிழிந்த
மடமைத் தமிழனே எதுவரை அமைவாய்!
அடிமை உன்நிலம் மொழியினம் பண்பியல்
குடிமை வாழ்க்கை என்றுதான் விடியுமோ?

செய்திகள்

இலங்கைத் தமிழினப் படுகொலையைத் தடுக்கக் கோரி உண்ணா நோன்பு - சென்னை.

இலங்கையில் தமிழினத்தைப் படுகொலை செய்யும் போரை நிறுத்தி, ஈழத் தமிழர்களுடன் பேச்சு நடத்த இலங்கை அரசை வற்புறுத்துமாறு இந்திய அரசைக் கோரியும் இன்னும் பல கோரிக்கைகளை வலியுறுத்தியும் கடந்த கடகம் 3 காரி (19.7.97) அன்று சென்னை-சைதாப்பேட்டையில் உண்ணா நோன்பு அறப்போர் பெரும்பாவரசு வா.மு. சேதுராமன் தலைமையிலும், புலவர் த. சுந்தரராசன் முன்னிலையிலும் நடைபெற்றது. வழக்கறிஞர் இரா. காந்தி உண்ணா நோன்பைத் தொடங்கி வைத்தார். பன்னாட்டுத் தமிழுறவு மன்றம், தலைநகர்த் தமிழ்க் கழகம் முதலாயினவும், தென்மொழி அவையம் உள்ளிட்டனவுமான ஐம்பது அமைப்புகளைச் சார்ந்த தமிழறிஞர்களும், ஆர்வலர்களும் கலந்துகொண்டனர். தமிழ்வழிப் பள்ளிகளின் கூட்டமைப்புச் சார்பில் திருவாட்டி இறை. பொற்கொடி பங்கேற்றார். மாலையில் முனைவர் மா. நன்னன், திருவாளர் சா. சந்திரேசன் ஆகியோர் உண்ணா நோன்பை முடித்து வைத்தனர். தென்மொழி அவையத்தின் சார்பில் புலவர் இறைக்குருவனார் கலந்துகொண்டார்.

பாவலரேறு நினைவேந்தல் நிகழ்ச்சி சென்னை

சென்னைத் தமிழ் மீட்புப் பேரவை, தையற் கலைஞர் தமிழ்ப் பேரவை, உயிர் மெய்த் தமிழ்க் கழகம் ஆகியவற்றின் சார்பில் தி.பி. *2028* கடகம் *4* ஞாயிறு *(20.7.97)* அன்று காலை *9.30* மணிக்கு சென்னை-*94*, பதுமநாப நகர் இராதா திருமண மண்டபத்தில் பாவலரேறு இரண்டாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது.

பாவலர் இளமாறன் அவர்கள் தலைமையிலும், வே. குருநாதன் அவர்கள் முன்னிலையிலும், 'விடியலைத் தேடி' என்னுந் தலைப்பில் பாட்டரங்கம் நடைபெற்றது. திரு. சிவசண்முகம் வரவேற்றார். பாவலர்கள் முத்து எத்திராசன், முகவை முனியாண்டி, கடலூர் தேவநாதன், வெள்ளையாம்பட்டுச் சுந்தரம் உள்ளிட்ட பாவலர்கள் இருபத்தொருவர் பங்கேற்றனர். பி. தேவபாலன் நன்றி நவின்றார்.

தொடர்ந்து திரு. க.ப. சின்னராசு தலைமையிலும், திருவாளர்கள் தி.வே. சுந்தரமூர்த்தி, 'முகம்' மாமணி, பெ. தருமலிங்கம், த. சுந்தரராசன் ஆகியோர் முன்னிலையிலும் கருத்தரங்கம் நடைபெற்றது. திரு. அ.சி. சின்னப்பா வரவேற்புரையும், திரு. கலையரசன் தொடக்கவுரையும்

நிகழ்த்தினர். திருவாளர்கள் இர. தணிகைமைந்தன், பாவலர் மு. இராமச்சந்திரன், செந்தமிழ் விரும்பி பார்த்தசாரதி, த.ப.சி. குமரன், சொ. தமிழ்விரும்பி, நன்மாறன்,வை.மா.குமார், ம.ப. கதிர், பெ. வேம்பரசு ஆகியோர்பேசினர்.திருவாட்டி இறை.பொற்கொடி கருத்துரையாற்றினார். தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு. பழ. நெடுமாறன் நிறைவுரையாற்றினார். க.ப. கிள்ளிவளவன் நன்றி நவின்றார்.

சௌந்தரபாண்டியன்-சசிகலா வாழ்க!

ஈரோடைப் புலவர் தி.மு. அரசமாணிக்கனார் மகன் திரு. சௌந்தரபாண்டியனுக்கும் திருப்பூர் திரு. அ. தண்டபாணியார் மகள் செல்வி சசிகலாவிற்கும் தி.பி. 2028 ஆடவை 1 ஞாயிறு (15.6.'97)அன்று பவானியில் (பாவலரேறு நினைவேந்தல் நிகழ்ச்சியின் தொடக்கத்தில்) திருமணம் நடைபெற்றது. சொல்லாய்வு அறிஞர் அருளியார் அவர்கள் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கினார்.

நாராயணசாமி-சென்னம்மாள் திருமணவிழா!

திருவண்ணாமலை மாவட்டம் தடராப்பட்டு (நினைவில் வாழும்) திரு. கோபால்-அலமேலு இணையரின் மகன் திருவளர்செல்வன் நாராயணசாமிக்கும், தகடூர் மாவட்டம் மோளையானூர் திரு. இராமசாமி-அம்பிகா இணையரின் மகள் திருவளர் செல்வி சென்னம்மாளுக்கும் தி.பி. 2028 கடகம் 25 ஞாயிறு (10.8.97) அன்று, திருவண்ணாமலையில் புலவர் மா. முத்துச்சாமி அவர்கள் தலைமையில் திருக்குறள் நெறித் திருமணம் நடைபெற்றது. திரு. கோ.அ. தனஞ்செயன் வரவேற்புரையாற்றினார். திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார் திருமணத்தை நடத்திவைத்து வாழ்த்துரை வழங்கினார். புலவர் 'தென்மொழி' மு. ஆறுமுகம், புலவர் சி. சின்னையன், புலவர் இரா. குப்புசாமி, திரு. கோ. சுப்பிரமணியன், திரு. நாராயணசாமி ஆகியோர் மணமக்களை வாழ்த்தி உரையாற்றினார். மணமகன் நாராயணசாமி நன்றி நவின்றார்.

சாத்தனூர்-அரசு மேனிலைப் பள்ளி இலக்கிய மன்றத் தொடக்கவிழா!

திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர் அரசு மேனிலைப்பள்ளி இலக்கியமன்றத் தொடக்கவிழா தி.பி. 2028 கடகம் 26 திங்கள் (11.8.'97) அன்று மாலை, ஆசிரியர் திரு. கு. குணபாரி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. புலவர் 'தென்மொழி' மு. ஆறுமுகம் வரவேற்புரையாற்றினார். தலைமையாசிரியர் திரு. ஆ. இராமலிங்கம் வாழ்த்துரை வழங்கினார்.புலவர் மா. முத்துச்சாமி சிறப்புரையாற்றினார். திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார் இலக்கியமன்றத்தைத் தொடங்கிவைத்து உரை நிகழ்த்தினார். புலவர் பெ. வரதராசன் நன்றி நவின்றார்.

தன்மானப் பெரும்புலவர்

- பாவலரேறு -

அக்காலப் புலவர்கள் அனைவரும், எவரோ ஒரு வள்ளலர், செல்வர், நிலக்கிழார், வேளிர், சிற்றரசர், பேரரசர் ஆகியோர்களைச் சார்ந்தோ அண்டியோ, அவர்களைப் பலவாற்றானும், அவர்கள் மகிழுற வேண்டிப் பாடிப் புகழ்ந்தோ பராவியோ, தம் வறுமை நிலைகளையும் ஏழ்மைக் கொடுமைகளையும் போக்கிக்கொண்டவகையிலேயே, தம் தம் புலமைத் திறன்களையும் கற்பனையாற்றல்களையும் வெளிப்படுத்தியுள்ளதை நன்கு உணரலாம்.

ஆனால், அவர்கள் போல் அல்லாமல் நம் திருவள்ளுவப் பெருந்தகையோ, இவ்வாறு, இன்னன்னோர்களை நெருங்கித் தம் புலமைத் திறத்தை அவ்வவர்பொருட்டு வீணே இழக்காமல், தன்மானத்தோடு தம் சிந்தனையாற்றல், புலமையாற்றல் அனைத்தையும் ஒன்றுதிரட்டி, அவற்றை இவ்வுலக நன்மைக்காகவும், மக்கள் நலத்துக்காகவும், பொதுமை அறம் கருதி, இவ்வுலகத்து எக்காலத்தும் எவ்விடத்தும் பயன்படுமாறு செய்த பெருந்தகைமையை என்னென்று கூறி, மகிழ்வது? அது, பெரிதும் வியந்து பாராட்டக் கூடியதன்றோ?

இனி, அவர் வாழ்வில், அவரும் ஏலேல சிங்கன் என்னும் கப்பல் வணிகர் ஒருவரால் புரக்கப்பெற்றார் என்பதும், அவர் மகளாகிய வாசுகி என்னும் பெண்ணியல் நல்லாளை மணந்துகொண்டு இல்லறம் மேற்கொண்டு ஒழுகினார் என்பதும் எந்த அடிப்படைச் சான்றும் அற்ற கட்டுக் கதைகளே என்க.

அம் மெய்ப்பொருள் பேராசிரியர் இல்லறம் மேற்கொண்டு வாழ்ந்திருக்கலாம் என்பதும், அவர்க்கு மக்கட்பேறு இருந்திருக்கலாம் என்பதும் அவர் நூலுள் ஆங்காங்குப் புலப்படுத்தியுள்ள அகப் புறவுணர்வுகள் வழியாக ஒருவாறு உய்த்துணரப்பெறுகின்றனவே எனினும், அவற்றுக்கும் எவ்வகைச் சான்றுறுதியும் இல்லை என்க. அதுபோலவே அவர் உழவோ, நெயவோ போலும் யாதாமொரு தொழிலோ அரச கரும வினையோ ஆற்றியிருக்கலாம் என்பதும் உறுதியாகத் தெரியவரும் செய்தி அன்று.

ஆனாலும், அவர் தன்மானமும், தன்முயற்சியும் கொண்டே வாழ்ந்திருக்க முடியும் என்பதும், அவ்வாறாக வாழ்க்கையிலும் அவர் மிகுந்த ஏழைமை நிலையிலேயே இருந்திருக்கக்கூடும் என்பதும், அவர் ஏழைமை பற்றி எடுத்துரைக்கும் உண்மை நிலைகளாலும், வேறு சில கூற்றுகளாலும் நன்கு புலப்படுகின்றன.

-'திருக்குறள் மெய்ப்பொருளுரை'

பாவலரேறு ஐயா அவர்களின்

திருக்குறள்
மெய்ப்பொருளுரை

[முதற் பகுதி]

- ❋ முந்நூறு பக்க அளவில், எழுவகைப் பிரிவில் அமைந்த விரிவான முன்னுரையுடன் கூடியது!
- ❋ முதற்பத்து அதிகாரங்களுக்கான உரை
- ❋ பொருள்கோள்முறை, பொழிப்புரை, விளக்கக் குறிப்புகள் ஆகியவற்றைத் தாங்கியுள்ளது!
- ❋ பரிமேலழகர் முதல் பாவாணர் வரை பல்வேறு உரையாசிரியர்களின் உரைகளை ஏற்றும் மறுத்தும் எழுதப் பெற்ற விளக்கங்களைக் கொண்டது!
- ❋ நூற்றுக் கணக்கான நூல்களிலிருந்து மேற்கோள்களும் எடுத்துக்காட்டுகளும் எடுத்தாளப்பெற்றது!
- ❋ ஆரிய நெறியை வீழ்த்தி அருந்தமிழ்நெறியை நிலைநாட்டுந் திறத்தது!

விலை : உரு. 150.00